பக்கங்கள் : பத்து

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 29 சனிக்கிழமை (13.05.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :167

## எமது கடற்பிராந்தியமும் வான்பரப்பும் எமக்கு உரித்துடையவை இல்லையா?

# கண்காணிப்புக் குழு மீது புலிகள் சீற்றம்!

## பக்கச் சார்பாக அறிக்கைகளை வெளியிடுவதாகக் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, மே 13

**"எமது கடற்பிரந்தியமோ எமது கட்டுப்பாட்டுக்குரிய வான் பரப்போ எமக்கு உரித்துடையவை அல்ல என்ற சாரப்பட அறிக்கை வெளியிடுவதற்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு எந்த அதிகாரமும் இல்லை." - என்று சீறியிருக்கின்றார் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.**

**கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்ஸனிடமே இதனைத் தாம் நேற்று நேரடியாகத் தெரிவித்திருக்கின்றார் என்று குறிப்பிட்ட அவர், கண்காணிப்புக் குழு இவ்வாறு பக்கச்சார்பாக அறிக்கைகளை வெளியிடுவதைப் புலிகள் சகித்துக் கொள்ள மாட்டார்கள் என்றும் கூறியிருக்கின்றார்.**

நேற்றுமுன்தினம் வடமராட்சிக் கடலில் இடம்பெற்ற கடற்சமரை ஒட்டி, கண்காணிப்புக் குழுத் தவைர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில், இலங்கைக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளுக்கு உரிமை ஏதும் இல்லை என்ற சாரப்பட தீர்ப்பளிக்கும் விதத்தில் கருத்து இடம்பெற்றிருந்தது.

இதுவே, புலிகளின் தலைமையைச் சீற்றத்தில் ஆழ்த்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது. இது குறித்து கண்காணிப்புக் குழுத் தலைவரை கிளிநொச்சிக்கு அவசரமாக அழைத்து அவருடன் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நேற்று மதியம் பேச்சு நடத்தினார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

### கண்காணிப்பாளர் அச்சுறுத்தப்பட்டார்

திருமலை, மே 13

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உறுப்பினரும் அவரது வாகனச் சாரதியும் நேற்று திருகோணமலை அபயபுர பகுதியில் சிங்களக் காடையர்களால் அச்சுறுத்தப்பட்டிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலையிலுள்ள கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர் ஒருவர் சென்ற வாக

(08ஆம் பக்கம் பார்க்க)

### மூதூரில் நேற்று தமிழ் இளைஞர் சுட்டுக் கொலை

மூதூர், மே 13

திருகோணமலை, மூதூரில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 17 வயதுடைய தமிழ் இளைஞரொருவர் கொல்லப்பட்டார். மேலுமொருவர் காயமடைந்துள்ளார். மூதூர், பேராலய வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. சம்ப

(08ஆம் பக்கம் பார்க்க)



இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் நேற்றுக் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளைச் சந்தித்தபோது.....

## அமைதி முயற்சிகளுக்கு உதவிட புதிய அமைப்பு விரைவில் உதயம்

கொழும்பு, மே 13

இலங்கையில் ஸ்தம்பித்துப் போயிருக்கும் அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கு உதவும் வகையில் 'இலங்கையின் நட்புறவு நாடுகள்' (Countries Friendly to Sri Lanka) என்ற புதியதொரு அமைப்பு உருவாக்கப்படவுள்ளதாகக் கொழும்பிலுள்ள இராஜதந்திர வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

ஏற்கனவே, இலங்கைக்கு உதவி வழங்குவதற்காக ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, ஜப்பான், நோர்வே ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து

(08ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கைக்கு வந்த இந்திய விமானங்கள்

கட்டுநாயக்கா, மே 13

இந்திய விமானப் படையின் இரு விமானங்கள் நேற்று மாலை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்து தரித்துச் சென்றன என அறிய வந்தது.

இந்த விமானத்தில் யார் வந்தார்கள் அல்லது வேறு ஏதேனும் பொருள்கள் கொண்டு வரப்பட்டனவா என்பது தெரிய வரவில்லை. (க)

## கடற்படையினரின் கலங்களில் ஏறவே வேண்டாம் கண்காணிப்பாளர்களிடம் புலிகள் வற்புறுத்தல்

### இறுதி எச்சரிக்கைக் கடிதம் அனுப்பிவைப்பு

கிளிநொச்சி, மே13

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கடற்கண்காணிப்பாளர்களை இலங்கைக் கடற்படையின் கடற்கலங்களில் பிரசன்னமாகியிருக்க வேண்டாம் என்று விடுதலைப் புலிகள் வலியுறுத்திக் கேட்டிருக்கின்றார்கள்.

இதை மீறி அத்தகைய கடற்கலங்களில் கண்காணிப்பாளர்கள் ஏறினால் அதனால் ஏற்படும் விளைவுகளுக்குத் தாங்கள் பொறுப்பாளிகள் அல்லர் என்றும் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக அடுத்தடுத்து மூன்று கடிதங்களை விடுதலைப் புலிகள் கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்பிவைத்திருக்கின்றார்கள்.

கடந்த ஏப்ரல் 18 ஆம் திகதியும், மே 10 ஆம் திகதியும் முதல் இரு கடிதங்களும் அனுப்பப்பட்டன. மூன்றாவது கடிதம் நேற்று முன்தினம்

(08ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுவேலியில் ஒருவர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம், மே 13

அச்சுவேலி தம்பாலைப் பகுதியில் நேற்றுக்காலை 8.30 மணியளவில் சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர் ஒருவர் இனந் தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்துரை சிவஞானம் (வயது 47) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவர் தனது சிகை அலங்கரிப்பு நிலையத்தில் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் என்று

(08ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்குக் கடலில் வீரச்சாவடைந்த போராளிகள்

கிளிநொச்சி, மே13

வடமராட்சி கிழக்குக் கடற்பரப்பில் வீரச்சாவடைந்த கடற்புலிப் போராளிகள் நால்வரின் பெயர்விவரங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இது குறித்து விடுதலைப் புலிகள் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

11.05.2006 அன்று வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் கடற்பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் சிறீலங்கா கடற்

(08ஆம் பக்கம் பார்க்க)

## இளம் குடும்பஸ்தரின் சடலம் காரைநகரில் நேற்று மீட்பு!

யாழ்ப்பாணம், மே13

காரைநகர் தோப்புக்காட்டில் இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் வெட்டுக்காயங்களுடன் நேற்று மீட்கப்பட்டது.

காரைநகர், ஊரிப்பகுதியைச் சேர்ந்த இராசன் சாந்தகுமார் (வயது-26) என்ற இளம்குடும்பஸ்தரின் சடலமே மீட்கப்பட்டது.

இவர் நேற்றுமுன்தினம் காலை தோப்புக்காட்டுக்கு கள் இறக்குவதற்காக சென்றார் என்றும் -

நண்பகல்வரை அவர் வீடு திரும்பாததையடுத்து உறவினர்கள் அவரைத் தேடிச் சென்றனர் என்றும் -

(08ஆம் பக்கம் பார்க்க)

## புதுடில்லியின் அதிக பங்களிப்பை கோருகின்றார் யசூசி அகாஷி

புதுடில்லி, மே 13

இலங்கை அமைதி முயற்சிகளின் பிந்திய நிலைவரம் குறித்து இராஜதந்திரிகளுக்கு விளக்கமளித்திருக்கும் இலங்கை அமைதி முயற்சிகளுக்கான ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி எதிர்வரும் 30ஆம் திகதி டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகளின் டோக்கியோ கூட்டத்திற்கு புதுடில்லி போதியளவு பங்களிப்பைச் செய்ய வேண்டுமென வற்புறுத்திக் கேட்டிருக்கிறார்.

(08ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

# கடல் சர்ச்சை குறித்து ஒரு முடிவை கண்காணிப்புக் குழு காணவேண்டும்

அரசுப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் மாலை வடமராட்சிக் கடற்பரப்பில் இடம்பெற்ற கடற்சமர் - அல்லது மோதல் - தற்போதைய யுத்த நிறுத்த நிலைமையை மென்மேலும் சிக்கலுக்குள் ஆழ்த்தியிருக்கின்றது.

இந்த விடயம் தொடர்பாக -

*"அண்மைய நாள்களாக இலங்கைக் கடற்படையினரை ஆத்திர மூட்டும் வகையில் கடலில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் இருப்பது போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு எதிரான மீறலாகும்."*

- என்று எடுத்த எடுப்பிலேயே விடுதலைப் புலிகளைக் கடுமையாகச் சாடும் விதத்தில் கண்காணிப்புக் குழுவினர் கூறியிருப்பது புலிகளை - தமிழர் தரப்பை - சீற்றத்துக்குள் ஆழ்த்தியிருக் கின்றது.

உண்மையில், யுத்த நிறுத்தத்துக்கு வழி செய்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கையின் கடற்பிரதேசம் விடுதலைப் புலிகள் மற்றும் இலங்கை அரசு ஆகிய இரண்டு தரப்புகளில் யாரின் கட்டுப் பாட்டுக்கு உட்பட்டது என்பது திட்டவட்டமாக வரையறை செய்யப்படவில்லை. தரைப் பிரதேசங்களைப் பொறுத்தவரை புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம், அரசின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்றஎல்லைப்பிரிப்புஓரளவுக்கேனும் தெளிவாக வரையறை செய்யப் பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் -

'இலங்கையின் அரசு' என்று கூறிக்கொள்ளும் தென்னிலங்கை நிர்வாகம் அதற்கென இறைமையுடையது என்று தன்பாட்டில் ஒரு முடிவை எடுத்துக் கொண்டுள்ள கண்காணிப்புக் குழு, அதனடிப் படையில் சில தீர்மானங்களையும் மேற்கொண்டு அறிவித்திருக்கின்றது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கடல் பிரதேச ஆதிக்கம் குறித்தும், வான் ஆதிக்கம் பற்றியும் எதுவும் தெரிவிக்கப்படாததால் அவை இறைமையுடைய அரசுக்கு உரியவை என்ற முடிவுக்கு கண்காணிப்புக் குழு வந்திருக்கிறது. இது முற்றிலும் தவறானது என்பதைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு நேற்று இடித்துரைத்துத் தெரிவித்திருக்கின்றார்.

அரசு, புலிகள் ஆகிய இருதரப்பையும் சமதரப்பாகப் பேணியே யுத்த நிறுத்தத்துக்கு வழி செய்த புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அதில் ஒரு தரப்புக்கு 'இறைமையுள்ளது' என்ற அதிக பட்ச தரத்தை - உயர் நிலையை - ஒதுக்கிக் கொடுத்து, பாகுபாடு காட்டும் முடிவை - நடுநிலைப் பொறுப்பை வகிக்க வேண்டிய கண்காணிப்புக் குழு எடுக்க முடியாது. ஒரு தரப்பை 'அரசு மூலம்' (State Factor) என்றும், மறு தரப்பை 'அரசு அல்லாத மூலம்' (Non State Factor) என்றும் வேறுபடுத்திப் பார்க்கும் போக்கை நடுவுநிலைமையோடு விடயங்களை அணுக வேண்டிய கண்காணிப்புக் குழு கையாளவே முடியாது என்பதைத் தெளிவாகக் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு எடுத்துரைத்திருக்கின்றார் தமிழ்ச்செல்வன்.

அத்தோடு கடல் விவகாரம் சம்பந்தமான விடயங்களை புரிந்துணர்வு ஒப்பந்தம் ஊடாக நோக்க வேண்டுமானால் ஒப்பந்தத்தின் ஷரத்து 1.3 மற்றும் ஷரத்து 2.11 ஆகியவற்றை கவனத்தில் எடுப்பது கட்டாயமாகின்றது.

நாட்டின் இறைமையைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளைத் தென்னிலங்கை அரசு முன்னெடுப்பது குறித்து ஷரத்து 1.3 குறிப்பிடுகின்றது.

"இலங்கையின் ஆயுதப் படையினர் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான வலிந்த தாக்குதல் நடவடிக்கைகள் தவிர்ந்த, இலங்கையின் இறைமையையும் நில ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும் தமது சட்ட ரீதியான பணியைத் தொடர்ந்து மேற்கொள்வர்." - என்றே அப்பிரிவு கூறுகின்றது.

எனவே, பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் கடற்புலிகள் மீது வலிந்த தாக்குதல்களை அரசுப் படைகள் தொடுத்துக் கொண்டு - அதன் மூலம் மேற்படி 1.3 ஷரத்தின் ஏற்பாடுகளை மீறிக் கொண்டு - நாட்டின் இறைமையின் அடிப்படையில் கடல் அதிகாரம் மேற்படி ஒப்பந்தத்தின் கீழ் தனக்கு மட்டுமே உள்ளது என்ற சுயபாத்தியதை - உரிமையை - தென்னிலங்கை அரசு கொண்டாட முடியாது.

சில விசேடமாகக் குறிப்பிட்ட இடங்கள் தவிர்ந்த ஏனைய கடல் பிரதேசங்களில் மீன்பிடித்தலுக்கு உள்ள தடைமுற்றாக நீக்கப்பட வேண்டும் என ஷரத்து 2.11 கூறுகின்றது. அதன்படி செயற்பட மறுத்து, தமிழர் தாயகப் பிரதேச மக்களின் கடற்றொழிலுக்கு எதிராக - அளவுக்கு அதிகமான - கெடுபிடிகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்து, அதன் மூலம் அந்த மக்களின் அன்றாட ஜீவனோ பாயத்துக்கே வேட்டு வைத்திருக்கும் சிங்கள அரசு, அந்த யுத்த நிறுத்த ஷரத்தை அப்பட்டமாக - பொது மக்களுக்குப் பெரும் தீங்கு விளைவிக்கத் தக்க வகையில் - மீறிக் கொண்டு, அதே யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் கடல் உரிமை தனக்கே உரியது எனக் கூறுவது வெறும் கேலிக்குரியதொன்றாகும்.

இலங்கைப் படைகள் தமது கடற் போக்குவரத்துக்கு கடற் கண்காணிப்பாளர்களை ஒரு மனிதக் கேடயமாகப் பயன்படுத்துகின்றன என்று குற்றம் சுமத்தியுள்ள விடுதலைப் புலிகள், தமது மறு அறிவித்தல் வரும்வரை கடற்படையின் கடற்கலங்களில் கண்காணிப்புக் குழுவினர் ஏறக்கூடாது என்று வற்புறுத்தியுள்ளனர். அதையும் மீறி கண்காணிப்புக் குழுவினர் அக்கலங்களில் ஏறினால் விளைவுகளுக்குத் தாங்கள் பொறுப்பல்லர் என்றும் புலிகள் எச்சரித்துள்ளனர்.

அது மட்டுமல்லாமல், இரு தரப்பினருக்கும் இடையிலான இராணுவச் சமநிலை வலு பேணுவது தொடர்பாகக் கடற்புலிகள் தமது பயிற்சிகளை வழமை போல முன்னெடுப்பது அவசியம் என்று சுட்டிக்காட்டியுள்ள தமிழ்ச்செல்வன், தமது நிர்வாகத்துக்கு உட்பட்ட பிரதேசத்தை ஒட்டிய கடற்பரப்பில் கடற்புலிகளின் செயற்பாட்டை அங்கீகரித்து, உறுதிப்படுத்தும் விதத்தில் 2003 ஏப்ரல் 25 ஆம் திகதி அப்போதைய கண்காணிப்புக் குழு அதிகாரிகளால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையையும் நினைவூட்டியிருக்கின்றார்.

இந்தப் பின்னணிகளை நோக்கும் போது கடல் போக்குவரத்துப் பாவனை, கடலாதிக்கம் போன்ற விவகாரங்கள் தொடர்பாக திட்டவட்டமான, தெளிவான முடிவு ஒன்றை - தீர்ப்பு ஒன்றை - கண்காணிப்புக்கு எடுத்து அறிவிக்க வேண்டிய சிக்கல் அதற்கு வந்துவிட்டது என்பதை உணர முடிகின்றது.

கண்காணிப்புக் குழுவின் முடிவுதான் என்ன? பொறுத்திருந்து பார்ப்போமே!

# அவசர காலச் சட்டத்துக்கு தமிழ் எம்.பிக்கள் எதிர்த்து வாக்களிப்பது அவசியமாகும்

## தமிழ்க் காங்கிரஸ் தலைவர் வலியுறுத்தல்

கொழும்பு,மே13

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவசரகாலச் சட்ட விவாதத்திற்கு வரும்போது அதனை எதிர்த்துப் பேசி வாக்கெடுப்புக்கு விடச்செய்து எதிர்த்து வாக்களித்து தமிழர்களின் எதிர்ப்பை வெளிக்காட்டவேண்டும்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை அவசரகாலச் சட்டமானது எந்தவித எதிர்ப்புமின்றி வாக்கெடுப்புக்கு விடப்படாமல் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட செய்தியை ஊடங்கள் வாயிலாக அறிந்து மிகவும் வேதனைப்பட்டேன்.

அவசரகாலச் சட்டம் எந்த நோக்கத்திற்காக கொண்டுவரப்பட்டது என்பது ஒருபுறமிருக்க அது தமிழர்களுக்கு எதிராகவே பாவிக்கப்படுகின்றது. அண்மையில் கொழும்பில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் கைதுசெய்யப்பட்டமைக்கும் இதுவே காரணமாக அமைந்தது. அதில் ஒரு நிகழ்வாக 40 வயதுடைய இரு பிள்ளைகளின் தாயாரும்எதுவித காரணமும் இன்றி கிருலப்பனையில் வைத்து கைதுசெய்யப்பட்டு பொலீஸ் நிலையத்தில் 15 நாள்கள் தடுத்துவைக்கப்பட்டார்.எந்தவித பாவமும் அறியாத அந்தத் தாய் தனது பச்சிளம் குழந்தைக்கு பொலீஸ் காவல் கூண்டினுள் இருந்தவாறு தாய்ப்பால் ஊட்டவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. இப்படியான நெஞ்சை நெருடுகின்ற ஈனத்தனமான நிலைக்கும் அரச படைகளின் குரூரமான செயற்பாடுகளுக்கும் இந்த அவசரகாலச் சட்டமே வழிவகுத்துள்ளது

அவசர காலச் சட்டத்தின் கீழ் ஒரு சந்தேக நபரால் பொலீஸாருக்குக் கொடுக்கப்பட்ட வாக்குமூலமாகக் கருதப்பட்டு அந்தச் சந்தேக நபருக்கு எதிராகப் பாவிக்கப்படலாம். அந்த வாக்குமூலம் சுயவிருப்பத்தின் பெயரிலேயே வழங்கப்பட்டிருக்கவேண்டும் என்ற தேவைப்பாடு இதற்கு இல்லை. சட்டவிரோதமாக வகைதொகையாக கைதுசெய்யப்பட்ட பல அப்பாவித் தமிழர்களுக்கு எதிராக இப்படியான குற்ற ஒப்புதல் வாக்குமூலமே பாவிக்கப்படுகின்றது.மேலும் மலையக நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் மற்றும் ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் இந்த அவசரகாலச் சட்டத்தை எதிர்த்துப்பேசாமலும் எதிர்த்து வாக்களிக்காமலும் இருந்துள்ளனர். அண்மையில் இவ்விருவரும் "அனைத்துத் தமிழர்களும் ஒன்றுபடவேண்டும்" எனக் கோரிக்கை விடுத்திருந்தனர். தமிழர்களுக்கு எதிராக படுமோசமாகப் பாவிக்கப்படும் இந்த அவசரகாலச் சட்டம் நீடிப்புக்காக நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் வேண்டப்படுமிடத்து அதனை எதிர்த்துப்பேசி அனைத்துத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதற்கு எதிராக வாக்களித்து தமிழர்களுடைய எதிர்ப்பைக் காட்டியிருந்திருக்க வேண்டுமல்லவா? இவ்வாறு தவறும் இடத்திலே இலங்கையிலே அவசரகாலச் சட்டமானது நாடாளுமன்றத்தில் எந்தவித எதிர்ப்பும் இன்றியும் தமிழர்களின் ஆதரவுடனும் நிறைவேற்றப்படுகின்றது என்னும் தவறான எண்ணத்தை சர்வதேச ரீதியில் ஏற்படுத்துகின்றது. இதுவே எனது ஆதங்கமும் மனவருத்தமும் ஆகும்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் என்ற வகையிலும் மேலும் இக்கொடிய சட்டத்தால் துன்புறுத்தப்படும் அப்பாவிகளின் துன்பங்களை நேரில் காணும் சட்டத்தரணி என்ற வகையிலும் தமிழ்பேசும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் நான் மிக மன்றாட்டமாகவும் உருக்கமாகவும் வேண்டிக்கொள்வது யாதெனில் இனிமேலாவது அவசரகாலச் சட்டம் விவாதத்திற்கு வரும்பொழுது அதை எதிர்த்துப்பேசி வாக்கெடுப்பிற்கு விடச் செய்து எதிர்த்து வாக்களித்து தமிழர் தம் எதிர்ப்பினை வெளிக்காட்ட வேண்டும் என்பதேயாகும்-என்று அ.விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

# அகலத் திரையில் படக்காட்சி

யாழ்ப்பாணம்,மே13

ரமண மகரிஷியின் நேரடி தரிசனம், சாயி பாபாவின் 14 வயது அற்புத லீலைகள், கைலாச தரிசனம் உள்ளடங்கலாக 2 மணி நேரப் படக்காட்சி இன்று காலை 9 மணி முதல் அகலத்திரையில் யாழ். சத்திய சாயி சேவா நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

# ஆழிப்பேரலை வீடமைப்பில் அசமந்தம்

ஆழிப்பேரலை பாதிக்கப்பட்ட வல்வெட்டித்துறை மக்களுக்கான குடியிருப்புகள் அமைத்துக் கொடுப்பதில் அதிகாரிகள் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்கின்றனர் என்று பாதிப்படைந்த மக்கள் தெரிவிக்கின்றனர். வீடமைப்புத்திட்டத்தின்படி ஆதிகோவிலடியில் 57 வீடுகளும், ரேவடியில் 77 வீடுகளும் அமைக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

மேற்படி திட்டம் ஆரம்பிக்கப்பட்டு பல மாதங்களானபோதும் இதுவரை எவ்வித பணிகளும் ஆரம்பிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.(70)

# நடுக்கடலில் ஈழ அகதிகள் தவிப்பு இந்தியக் கடற்படை மீட்டது

இராமேஸ்வரம்,மே13

தமிழகத்தின் இராமேஸ்வரம் கடற்பகுதியில் நடுக்கடலில் தத்தளித்த 16 இலங்கை அகதிகளை இந்தியக் கடற்படையினர் கடந்த வியாழக்கிழமை மீட்டு தமிழகப் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

திருகோணமலை பகுதியிலிருந்து 4 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆண்கள், 6 பெண்கள், ஓர் ஆண்குழந்தை, 4 பெண் குழந்தைகள் உள்ளிட்ட 16பேர் பேசாலை கடற்கரைப் பகுதியிலிருந்து அகதிகளாக இந்தியா புறப்பட்டனர். அவர்களை ஏற்றிவந்த படகு இந்திய கடற்பகுதியான 3ஆம் தீடையில் அவர்களை இறக்கிவிட்டுச் சென்றுவிட்டது.

அப்போது, அப்பகுதி கடலில் இந்திய கடற்படைக்குச் சொந்தமான ஹோவர் கிராப்ட் கப்பல் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தது. 3ஆம் தீடையில் சிலர் இருப்பதைப் பார்த்த கடற்படை வீரர்கள் அங்கு சென்று அவர்களிடம் விசாரணை நடத்தினர்.

விசாரணையில், அவர்கள் இலங்கையில் இருந்து வந்திருப்பது தெரிய வந்தது. இதனைத் தொடர்ந்து அவர்கள் 16 பேரையும் கப்பலில் ஏற்றிவந்து மண்டபம் காவல்நிலையத்தில் கடற்படையினர் ஒப்படைத்தனர்.

மண்டபம் காவல் நிலையத்தில் நடந்த விசாரணையில் படகு வாடகையாக தலா ரூபா 7 ஆயிரம் கொடுத்து வந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

# குமுதினிப் படகுச் சேவை குறைப்பு

நல்லூர்,மே13

நெடுந்தீவு-குறிகாட்டுவான் இடையேயான கடல்வழிப் போக்குவரத்துச் சேவை தினமும் ஒரு தடவை மட்டுமே நடைபெறுகின்றது.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண நிலை காரணமாகப் பொதுமக்களின் போக்குவரத்து கணிசமான அளவு குறைந்துள்ளது. இதன் காரணமாகப் படகுச் சேவையும் குறைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

இதன்படி காலை நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானுக்கு வரும் குமுதினி பயணிகள் படகு பிற்பகலிலேயே குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவிற்குப் புறப்படும்.

முன்னர் தினசரி இரண்டு சேவைகள் இடம்பெற்றுவந்தமை குறிப்பிடத்தக்கது.

(111)

# இளைஞர் இருவரைக் காணவில்லை மனித உரிமைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,மே13

காணாமற்போனவர்கள் எனக் கருதப்படும் இரு இளைஞர்கள் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த ஸ்ரீகரன் ராஜகஜன் (வயது 25), சாவகச்சேரி டச்சு வீதியைச் சேர்ந்த தர்மகுலசிங்கம் குருபரன் (வயது 24) ஆகியோரையே காணவில்லையென அவர்களது உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் பி.ப. 4.45 மணியளவில் யாழ். கலட்டிச்சந்தியில் காணப்பட்டுள்ளனர் என்று உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் மேலும் நான்கு இளைஞர்கள் கலட்டிப் பகுதியில் நடமாடியவேளை காணாமற்போயுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

## உதயவாக்கு

**மனிதன் ஓர் உண்மையைக் கண்டுபிடித்தான் என்றால் இருட்டறையில் ஒரு தீபத்தை ஏற்றினான் என்று பொருள்.**

## நாளை

**சித்திரை : 31**
**ஞாயிற்றுக்கிழமை**
**14.05.2006**
**திதி : பிரதமை**
**பிற்பகல் : 12.32**
**நட்சத்திரம் : அனுசம்**
**முன்னிரவு : 10.08**
**சுபநேரம் : 02.53 - 10.23**
**ராகுகாலம் : 04.33 - 05.53**

# கண்காணிப்புக்குழு முன்னாள் தலைவர் மறைவுக்கு ஈ.பி.டி.பி. அனுதாபச் செய்தி

கொழும்பு,மே13

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் ட்ரோன் புறூவ்கொவ்டேயின் மறைவுக்கு ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி அனுதாபம் தெரிவித்துள்ளது.

அக்கட்சி விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் யுத்தம் நடந்து கொண்டிருந்த காலகட்டத்தில் அதில் ஒரு தளர்வுப் போக்கை ஏற்படுத்தவும் - சமாதானப் பேச்சுகளை முன்னெடுக்கவும் சர்வதேச சமூகத்தின் ஏற்பாட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதன் சீரான அமுல்படுத்தலில் கண்காணிப்புப் பணியை செம்மையாக அவதானிக்கக் குழு நியமிக்கப்பட்டது. நெருக்கடிமிகுந்த காலகட்டத்தில் அக்குழுவுக்குத் தலைமைவகித்த ட்ரோன் புறூவ் கொப்டே அவர்களின் பணி மகத்தானது.

அடிப்படையிலேயே தவறானதாகக் கருதப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதில் எதிர்கொண்ட இடர்களையும் ஒப்பந்த மீறல்களையும் கட்டுப்படுத்த ட்ரோன் புறூவ்கொவ்டே அவர்கள் எதிர்கொண்ட விதம் பெரும் சவாலாகவே அமைந்திருந்தது.

அவரது கடைசிக்காலகட்டத்தில் இலங்கை மக்களின் சுமுகமான வாழ்வுக்காக அர்ப்பணித்து செயலாற்றியதை ஈ.பி.டிபி. மிகவும் கௌரவத்தோடு நினைவுகூர்ந்து கொள்வதோடு அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தாரோடும், நண்பர்களோடும் ஈ.பி.டி.பியினராகிய நாமும் எமது கவலையைப் பகிர்ந்துகொள்கின்றோம் - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ந்து ஏழாவது தடவையாக மேற்கு வங்கத்தில் இடதுசாரி ஆட்சி

## நேபாளத்திலும் அக்கூட்டணியே வெற்றி

புதுடில்லி,மே13

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் தொடர்ந்து ஏழாவது தடவையாக சட்டசபைத் தேர்தலில் வென்று இடதுசாரிக் கூட்டணி ஆட்சியைத் தக்கவைத்துள்ளது. கேரள மாநிலத்திலும் இக்கூட்டணி ஆட்சியைப் பிடித்துள்ளது.

மேற்கு வங்கத்தில் வரலாறு காணாத வகையில் 235 தொகுதிகளில் இடதுசாரி கூட்டணி வெற்றிபெற்றுள்ளது. கட்சியை அமோக வெற்றிக்கு இட்டுச்செல்வதில் முக்கிய பங்காற்றியுள்ள புத்ததேவ் பட்டாசார்யா மீண்டும் முதல்வராகிறார்.

கடந்த 2001ஆம் ஆண்டுத் தேர்தலில் இடதுசாரிக் கூட்டணிக்கு 199 இடங்கள் கிடைத்தன. இந்த முறை அந்த எண்ணிக்கையைத் தாண்டி சாதனை படைத்ததுடன் தொடர்ந்து ஏழாவது முறையாக ஆட்சியைத் தக்கவைத்துள்ளது இக்கூட்டணி.

இடதுசாரிகளுக்கு எதிராக பலமான கூட்டணியை எதிர்க்கட்சிகள் அமைக்கத் தவறிவிட்டன. இது எதிர்க்கட்சிகளுக்குப் பலவீனமாகவும் ஆளும் கட்சிக்கு பலமாகவும் அமைந்துவிட்டது என்று அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கேரளத்தில் மொத்தம் உள்ள 140 இடங்களில் 98 தொகுதிகளைக் கைப்பற்றி ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது மார்க்சிஸ்ட் தலைமையிலான இடதுசாரி முன்னணி.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும் முதல்வர் வேட்பாளருமான வி.எஸ். அச்சுதானந்தன் உட்பட இக்கூட்டணி வேட்பாளர்கள் மாநிலத்தின் அனைத்துப் பிராந்தியங்களிலும் வெற்றிபெற்றுள்ளனர்.

புதுவையில் மீண்டும் காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைக்கிறது. இருப்பினும் இக்கட்சிக்குத் தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை.

தி.மு.க., பா.ம.க., இந்திய கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவுடன் இந்த ஆட்சி அமைகிறது.

புதுவை யூனியன் பிரதேச சட்டப் பேரவைக்கான 30 தொகுதிகளில் காங்கிரஸ் 10 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. தி.மு.க. 7 இடங்களிலும் பா.ம.க. 2 இடங்களிலும் இந்தியக் கம்யூனிஸ்ட் ஒரு தொகுதியிலும் வெற்றிபெற்றுள்ளன.

அஸாம் மாநிலத்தில் மொத்தம் உள்ள 126 தொகுதிகளில் அதிகபட்சமாக ஆளும் காங்கிரஸ் கட்சி 33 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. இரண்டாவதாக காங்கிரஸ் கட்சி ஆதரவுடன் போட்டியிட்ட சுயேச்சைகள் 11 பேர் வெற்றிபெற்றனர்.

அஸாம் கணபரிஷத் 8 இடங்களிலும் பா.ஜ.க. ஓர் இடத்திலும் புதிதாகத் தொடங்கப்பட்டு தேர்தலைச் சந்தித்த சிறுபான்மைக் கட்சியான ஏ.யூ.டி.எவ். 5 இடங்களையும் கைப்பற்றின.

# சட்டசபையில் முதல் தட்வையாக ம.தி.மு.க

கட்சி தொடங்கி 13 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக சட்டப் பேரவையில் நுழைந்திருக்கிறது ம.தி.மு.க.

1996 ஆம் ஆண்டு ம.தி.மு.க. பொதுத் தேர்தலில் போட்டியிட்டது. அப்போது பேரவைத் தேர்தலிலும் மக்களவைத் தேர்தலிலும் அக்கட்சி போட்டியிட்டு தோல்வியடைந்தது.பின்னர் 2001ஆம் ஆண்டு பேரவைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டது. அத்தேர்தலிலும் ஒரு வேட்பாளரும் வெற்றி பெறவில்லை. தற்போது அ.தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்று ம.தி.மு.க வெற்றி பெற்று 6 இடங்களைப் பிடித்துள்ளது.

# மக்கள் வழங்கியுள்ள தீர்ப்பை ஏற்கின்றாராம் ஜெயலலிதா

சென்னை,மே13


ஜெயலலிதா

மக்கள் வழங்கியுள்ள தீர்ப்புக்கு நான் தலை வணங்குகின்றேன் என்று அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவைத் தேர்தல் முடிவு குறித்து நேற்றுமுன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கை -

மக்கள் தீர்ப்பு மகேசன் தீர்ப்பு என்பதில் நான் எப்போதுமே அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டுள்ளேன். இந்த சட்டபேரவைத் தேர்தலில் மக்கள் வழங்கியுள்ள தீர்ப்புக்கு நான் தலை வணங்குகிறேன். அ.தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கு வாக்களித்த அனைத்து வாக்காளப் பெருமக்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

எவ்வித வருத்தமும் இன்றி முதலமைச்சர் பதவியில் இருந்து நான் விலகுகிறேன். தமிழகத்தின் முதலமைச்சர் என்ற முறையில் என்னால் இயன்ற அனைத்து வகையிலும் தமிழகத்தின் முன்னேற்றத்துக்காகவும் வளர்ச்சிக்காகவும் தமிழக மக்களின் மேன்மைக்காகவும் இடையறாது பாடுபட்டுள்ளேன். இந்த மனநிறைவுடன்தான் தமிழக முதலமைச்சர் பதவியிலிருந்து விலகுகிறேன்.

அ.தி.மு.க. தொடர்ந்து மக்கள் பணி ஆற்றிடும் என்ற உறுதியையும் இந்த நேரத்தில் தமிழக மக்களுக்கு அளிக்க விரும்புகிறேன் - என்றார் ஜெயலலிதா.

# கணிசமான வாக்குகள் கிடைத்ததே பெரும் வெற்றி என்கிறார் விஜயகாந்த்

சென்னை,மே13


விஜயகாந்த்

கணிசமான வாக்குகள் கிடைத்திருப்பது தேசிய முற்போக்கு திராவிட கழகத்திற்கு மிகப் பெரிய வெற்றி என்று அக்கட்சித் தலைவரும் நடிகருமான விஜயகாந்த் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

தமிழகத்தில் கூட்டணி ஆட்சி என்ற நிலை ஏற்பட்டுள்ளதற்கு எனது அரசியல் பிரவேசமே காரணம். வெற்றி கிடைக்காவிட்டாலும் பல தொகுதிகளில் கணிசயான வாக்குகள் அளித்து எனக்கு ஆதரவு அளித்த மக்களுக்கு நன்றி தெவித்துக் கொள்கிறேன். கட்சித் தொண்டர்கள் சிறப்பாகப் பணியாற்றினார்கள். நான் 5 முதல் 10 தொகுதிகள் வரை கிடைக்கும் என்று எதிர்பார்த்தேன் தனித்துப் போட்டியிடவேண்டும் என்பதை விரும்பித்தான் செய்தோம் இரு கட்சிகளும் (அ.தி.மு.க., தி.மு.க.) கூட்டணி குறித்துப் பேசினர். தேர்தலில் கூட்டணி ஏற்படுத்திக்கொள்வது குறித்து கட்சி நிர்வாகிகளுடன் பேசி முடிவு எடுக்கப்படும். அரசியலில் ஈடுபடும் அதேவேளையில் சினிமாவிலும் தொடர்ந்து நடிப்பேன்.

# சட்டசபைக்குப் போவாரா ஜெயலலிதா?

அ.தி.மு.க., ஆட்சியின் போது தி.மு.க., தலைவர் கருணாநிதி சட்டசபைக்குள் சென்றதே இல்லை. கடந்த 1991-1996ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சி அமைத்தது. அத்தேர்தலில் வெற்றி பெற்றவர் தி.மு.க. தலைவர் கருணாநிதி மட்டுமே. அவர் தனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்து விட்டார்.

அடுத்து 2001ஆம் ஆண்டில் அ.தி.மு.க., ஆட்சி அமைத்தபோது சேப்பாக்கம் தொகுதியில் நின்று வெற்றி பெற்றார் தி.மு.க. தலைவர் கருணாநிதி. இந்த ஐந்து வருடமும் கருணாநிதி சட்டசபை நிகழ்ச்சிகளில் பங்கேற்றதே இல்லை. சட்டசபை கூட்டத் தொடர் நடக்கும் போது, முன் மண்டபம் வரை வந்து வரவுப் புத்தகத்தில் கையெழுத்து மட்டும் போட்டு விட்டுச் செல்வார். இதை பல முறை ஜெயலலிதா குற்றம் சாட்டி பேசியுள்ளார். மக்களுக்காக வெற்றி பெற்று வந்து விட்டு, தனது கடமையை செய்யத் தவறி விட்டார் கருணாநிதி என்று ஜெயலலிதா பேசுவார்.

இந்த முறை நடந்த தேர்தலில் 61 தொகுதிகளை பிடித்து எதிர்க்கட்சித் தலைவராக வந்துள்ளார் ஜெயலலிதா. இவர் எதிர்க்கட்சித் தலைவராக சட்டசபையில் செயல்படுவாரா அல்லது தனக்கு பதிலாக வேறு ஒருவரை நியமிப்பாரா என்பது வேறு விஷயம்.

ஆனாலும், தமிழக அரசியலில் ஜெயலலிதா எதிர்க்கட்சித் தலைவராகவே தென்படுவார். அவர் கருணாநிதியைப் போல இல்லாமல், சட்டசபைக்குள் வந்து நிகழ்ச்சிகளில் பங்கேற்பாரா என்ற எதிர்பார்ப்பு மக்களிடையே எழுந்துள்ளது.

மேலும், ஆளும் கட்சியினருடைய வாதத்திற்கு ஜெயலலிதா எதிர்வாதம் செய்யும் திறமையைக் கடந்த ஐந்து ஆண்டுகளில் நன்றாக வளர்த்துக் கொண்டுள்ளார். அவர் சட்டசபைக்கு கண்டிப்பாக வந்தே தீருவார் என்று அ.தி.மு.க. வட்டாரம் தெரிவித்தது

# சோனியா சாதனை வெற்றி!


சோனியா

இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி, உத்தரப் பிரளதேச மாநிலம் ரெபரேலி நாடாளுமன்றத் தொகுதியில் 4 லட்சத்து 17ஆயிரத்து 888 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சமாஜவாதி, பாரதீய ஜனதா உள்ளிட்ட அனைத்துக் கட்சி வேட்பாளர்களும் கட்டுப்பணம் இழந்துள்ளனர்.

தொகுதியில் மொத்தம் பதிவான வாக்குகள் 43.36 சதவீதம் தான், அதாவது 5 லட்சத்து90 ஆயிரத்து 26 வாக்குகள் பதிவாகி இருந்தன. அதில் சோனியா, 4 லட்சத்து 74ஆயிரத்து 891வாக்குகளைப் பெற்றுள்ளார். அவருக்கு அடுத்த படியாக வந்த சமாஜவாதி கட்சி வேட்பாளர் ராஜ்கமார் செளத்ரி 57ஆயிரத்து3 வாக்குகளைப் பெற்று கட்டுப்பணம் இழந்தார்.

1952இல் இருந்து இதுவரை 17 முறை ராய் ரெபரேலி தேர்தல் நடந்துள்ளது. அதில் 14 முறை காங்கிரஸ் வேட்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளனர். முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி உட்பட ரெபரேலி தொகுதியில் போட்டியிட்டவர்கள் சாதிக்காததை 4 லட்சத்து 17ஆயிரத்து 888 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றதன் மூலம் சாதித்துள்ளார். 59 வயதாகும் காங்கிரஸ் தலைவர் சோனியா.

2004 இல் இத்தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், பிரதமர் பதவியை ஏற்க மறுத்ததை அடுத்து அவரது செல்வாக்கு மேலும் அதிகரித்தது.தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் தலைவராகவும் இருந்த அவர், ஆதாயம் தரும் வேறு பதவியை வகிக்கும் பிரச்சினை காரணமாக எம்.பி. பதவி உட்பட அனைத்துப் பதவிகளையும் ராஜினாமா செய்தார். பின்னர் மீண்டும் ரெபரேலி தொகுதியில் போட்டியிட்டார்.

சோனியாவின் இந்த வெற்றியை அடுத்து, அவர் பிரதமராக வேண்டும் என விருப்பம் தெரிவித்து காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 25 பேர் அவரிடம் கடிதம் கொடுத்தனர். ஆனால், இநதக் கோரிக்கையை ஏற்க சோனியா மறுத்துவிட்டார்.

அதேசமயம், தனது மகன் ராகுல் காந்திக்கு கட்சியில் கூடுதல் பொறுப்பு வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

# சினிமா பிரபலங்களின் முடிவுகள்


எஸ்.வி. சேகர் நெப்போலியன்

சென்னை மயிலாப்பூர் தொகுதியில் தி.மு.க., வேட்பாளர் நடிகர் நெப்போலியனும் அ.தி.மு.க. வேட்பாளர் நடிகர் எஸ்.வி.சேகரும் மோதினர்.

வாக்கு எண்ணிக்கை கிண்டி அண்ணா பல்கலைக் கழகத்தில் நடந்தது. காலையில் வாக்கு எண்ணிக்கையை தெரிந்து கொள்ள நெப்போலியன் ஆர்வமாக வந்தார். முதல்சுற்றில் எஸ்.வி.சேகர் முன்னணியில் இருக்கிறார் என்றதும் நெப்போலியன் முகத்தில் சோகம் கப்பியது. மூன்றாவது சுற்று எண்ணும் போது நெப்போலியன் வாக்கு எண்ணிக்கை அறையிலிருந்து வெளியேறினார். அவர் வெளியேறிதும் நடிகர் எஸ்.வி.சேகர் வருகை தந்தார். கூடுதல் பணி ஆட்கள் இல்லாத காரணத்தில் வாக்கு எண்ணிக்கை மந்தமாக நடைபெற்றது. இறுதியில் எஸ்.வி சேகர் வெற்றிபெற்றார்.

* * * *


கார்த்திக்

நடிகர் கார்த்திக்கின் 'போவேட் பிளக்' கட்சியின் வேட்பாளர்கள் சுயேச்சைகளை விட குறைவான வாக்குகள் பெற்று தேர்தல் களத்தில் காணாமல் போய்விட்டனர்.

தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணிக்கு எதிராக களம் இறங்கிய 'போவேட் பிளக்' கட்சியின் மாநில தலைவர் நடிகர் கார்த்திக் நீண்ட இடைவெளிக்கு பின் பிரசாரத்திற்கு வந்தார்.

தேர்தலில் 65 வேட்பாளர்கள் நிற்பதாகவும், அந்த தொகுதிகளில் அ.தி.மு.க. விற்கு பாடம் புகட்டுவோம் எனவும் அவர் கூறினார்.

இப்படி தேர்தல் களத்தில் வலம் வந்த அவரது கட்சி வேட்பாளர்கள் அவரவர் தொகுதியில் சில சுயேச்சைகளை விட குறைந்த எண்ணிக்கையிலேயே வாக்குகள் பெற்று கட்டுப்பணத்தை பறி கொடுத்துள்ளனர்.

* * * *


ஆனந்தராஜ்

நான்கு முறை அ.தி.மு.க. வெற்றி பெற்ற புதுவை யூனியன் பிரதேச உருளையன்பேட்டை தொகுதியில் தற்போது அ.தி.மு.க. வேட்பாளராக போட்டியிட்ட வில்லன் நடிகர் ஆனந்தராஜ் கட்டுப்பணத்தை இழந்தார். அ.தி.மு.க. வேட்பாளர் ஆனந்தராஜ் பல இடங்களில் வாக்குக் கேட்கவே செல்லவில்லை.

இந்நிலையில் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதில் தி.மு.க. வேட்பாளர் சிவா எட்டாயிரத்து 509 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். பிரபல வில்லன் நடிகர் ஆனந்தராஜ் வெறும் 710 வாக்குகள் மட்டுமே பெற்று கட்டுப்பணம் இழந்தார்.

# இஸ்ரேலிடம் அணுஆயுதங்கள் அதிகம் என்கிறார் பிரி.நிபுணர்

லண்டன்,மே13

இஸ்ரேலிடம் அணு ஆயுதங்கள் பெருமளவில் உள்ளன. உலகில் அணு ஆயுதங்கள் வைத்திருக்கும் ஆறாவது நாடாக இஸ்ரேல் உள்ளது என்று பாதுகாப்புத் தொடர்பான பிரிட்டிஷ் நிபுணர் ஜோன் எல்டிரிட்ஜ் தெரிவித்துள்ளார்.

எண்ணிக்கை தெரியாத அளவில் ஏவுகணைகள் இஸ்ரேல் வசம் உள்ளன. மூன்று நீர்மூழ்கிக் கப்பல்களையும் அது வாங்கியுள்ளது. அணு ஆயுதங்களை கொள்முதல் செய்வதில் இஸ்ரேல் முனைப்புடன் சமீபகாலத்தில் கவனம் செலுத்தி வருகிறது என்றும் அவர் சொன்னார்.

இச்செய்தி இஸ்ரேல் தரப்பில் ஒப்புக்கொள்ளப்படவோ அல்லது மறுக்கப்படவோ இல்லை.

இதனிடையே இஸ்ரேலை அழிக்க ஈரான் முயன்றால் அது தனது அழிவுக்கே வழி வகுக்கும் என்பதை ஈரான் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று இஸ்ரேலியத் துணைப் பிரதமர் ஷிமன் பிரிஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரானின் அணு ஆயுதத் திட்டத்துக்கு அமெரிக்கா நடவடிக்கை மேற்கொண்டு வரும் நிலையில் இஸ்ரேல் குறித்த பிரிட்டிஷ் நிபுணரின் அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுத்திகரிப்புத் தொழிலாளர் நியமனப் பட்டியல்

யாழ்ப்பாணம்,மே 13

வடபிராந்தியத்தில் பணியாற்றும் சுகாதாரத் தொண்டர்களில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்ப் பட்டியலை வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன. நியமனம் பெற்றவர்கள் குறித்த நேரத்தில் குறிப்பிட்ட இடத்திற்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

**நியமனம் பெற்றவர்களின் பெயர் விவரம் வருமாறு**

திருமதி கஜெந்திரன் ராஜகுமாரி - சுன்னாகம், திருமதி அகிலேஸ்வரி ஜெயந்திதேவி - ஏழாலை மத்தி,சுன்னாகம், திருமதி சபாபதிதாசன் விமலறஜனி - நெடுந்தீவு, கந்தையா ஜெயராணி, மீசாலை வடக்கு, திருமதி ஆனந்தராசா தேவலோகராணி- மந்துவில் கிழக்கு, திருமதி சக்திவேல் உதயராணி- பருத்தித்தறை, ஆறுமுகம் ஜீவனாந்தி - மூளாய், திருமதி ஜெயசீதன் ஜூலிமேரி -நெடுந்தீவு மத்தி, குமாரசாமி செல்வனந்தி –நெடுந்தீவு, திருமதி சுசந்தா பிறேம்லால் சசிறஞ்சினி -அளவெட்டி மேற்கு, சின்னராசா மாலினி - கோப்பாய் தெற்கு, குகதாசன் மஞ்சுளா - கரவெட்டி தெற்கு, திருமதி சிவச்செல்வம் பிறேமினி -வியாபரிமூலை, செல்வன் தனேஸ்வரி - பாலசிட்டி, மதியாபரணம் ஜெகவதனி - நெடுந்தீவு, திருமதி ஜெகரூபன் பவானந்தி -மருதங்கேணி தெற்கு, திருமதி மகேந்திரராஜா செல்[illegible]குமாரி - உடுத்துறை வடக்கு, திருமதி பிரபா[illegible] பாமினி - தும்பலை மேற்கு, நிகிராஸ் மன்[illegible]டலா - மணற்காடு, கதிரவேற்பிள்ளை சுந்தரகாந்தி - துன்னாலை வடக்கு, சிங்கநாயகம் அன்பிலஸ் சுகந்தி - பண்டத்தரிப்பு, திருமதி சுந்தரபாலன் மதிவேணி - தெல்லிப்பழை, அப்பையா மதிரஜனி - மிருசுவில், திருமதி அகிலன் நளாயினி - அனலைதீவு, திருமதி சுப்பிரமணியம் புஸ்பராணி - வேலணை மேற்கு, வேலணை, திருமதி ஆலசுந்தரம் சுமதி - கரணவாய் கிழக்கு, குருநாதபிள்ளை நிரஞ்சினி - ஆனைக்கோட்டை, சங்கரப்பிள்ளை சசிகலா - தெல்லிப்பழை கிழக்கு, இராஜகுமார சுபோஜினி - மல்லாகம், வல்லிபும் உதயராணி - மந்துவில் வடக்கு, பிரபாகர்ன் மதிவதனி - கோப்பாய் வடக்கு, பெரியான்விமலராணி - புத்தூர் கிழக்கு, கோபாலகிருஸ்ணன் விஜிதா - உடுவில், நல்லையா உதயரஞ்சிதா - ஏழாலை தெற்கு, தருமரட்ணம் செல்வநாயகி - எழுவைதீவு, திருமதி தனபாலசுந்தரம் ஜெயவதனி - அனலைதீவு, இராசையா கோமதி - நீர்வேலி வடக்கு, திருமதி கதிர்காமநாதன் துசியந்தினி, கரவெட்டி தெற்கு, கந்தசாமி கமலாஜினி, கரவெட்டி மேற்கு, கந்தையா ரேவதி - செம்பியன்பற்று, நாகமுத்து சிவந்தினி - தாவடி தெற்கு, கந்தசாமி ஜெயசுதர்சினி - தெல்லிப்பழை, திருமதி இராஜாரட்ணம் ரஞ்சினி - புத்தூர் கிழக்கு, திருமதி இராதகிருஸ்ணன் பிரேமலி -புத்தூர் கிழக்கு, பொன்னன் புஸ்பவதி - கைதடி தெற்கு, கந்தையா சரஸ்வதி -சரசாலை தெற்கு, நவரட்னராஜன் பராசக்தி - மட்டுவில் வடக்கு, திருமதி விஜயகுமார் சசிகலா -சாவகச்சேரி, திருமதி மரியதாஸ் டயானா - மாதகல் மேற்கு, வினாசி மங்கலேஸ்வரி - கட்டுவன் மேற்கு, கிருஸ்ணசாமி சுகஸ்தி - கட்டப்பிராய், தவராஜா வலண்டினா - அராலி வீதி, சங்கானை, கணபதிப்பிள்ளை சிவாஜினி - 7ஆம் கட்டை, சண்டிலிப்பாய், ஸ்ரீதரன் கஜேந்தினி - அம்பனை மேற்கு, எம்.தவராஜா - கொழும்பகம், செல்லத்துரை தருமபாமா - வரணி வடக்கு, திருமதி பிரகாசம் நித்தியதிரேசா - நெடுந்தீவு, மாஸ்கலஸ் தோமஸ் மரியகொலஸ்ரிக்கா - நெடுந்தீவு, நல்லாண் யோகராணி -கரவெட்டி மேற்கு, தாமோதரம்பிள்ளை யசிந்தா - கரவெட்டி மேற்கு, தருகாசலம் செல்வராணி - கரவெட்டி மேற்கு, பாலச்சந்திரன் ஸ்ரீமதி - சங்கரத்தை, திருமதி ஜி.சரோஜினி - பண்டத்தரிப்பு, திருமதி இராஜேந்திரன் புஸ்பராணி - மந்துவில் மேற்கு, குணதாசன், ஜெயகௌரி - கைதடி தெற்கு, ஆறுமுகம் ஜெசிகா - உசன், திருமதி அரியரட்ணம் ரஞ்சினி - வேலணை கிழக்கு, அகஸ்ரீன் மேரி றொசிற்றா - நெடுந்தீவு, திருமதி கந்தசாமி சரோஜினிதேவி - நீர்வேலி மத்தி, நாகமுத்து ஜெயந்தகுமாரி - கரவெட்டி தெற்கு, சிவபாதசுந்தரம் ஜெயரூபன் - மருதங்கேணி தெற்கு, திருமதி ரி.குணசேகரம், கோப்பாய் தெற்கு - மகேஸ்வரானந்தன் - புத்தூர், ஆர்.கிருபாகரன் - உடுப்பிட்டி, ஆ.கோவந்தினி - தெல்லிப்பழை, உதயகுமார் ரஞ்சினிதேவி - அல்லாரை தெற்கு, அருன்நாதன் மாலினி - கரம்பைக்குறிச்சி மேற்கு, சரவணமுத்து ரூபரஞ்சினி - சாவகச்சேரி வடக்கு, செல்லத்துரை கவிதாஞ்சலி - இடைக்குறிஞ்சி மேற்கு, திருமதி மோகனரூபன் உமாவதி - இமையாணன் மேற்கு, வீரசிங்கம் வசந்தகுமாரி - நாகர்கோவில் தெற்கு, விக்கினேஸ்வரன் வினுஷா - நெடியகாடு வடக்கு, மார்க்கண்டு சுவரஞ்சினி - பன்னாலை, செல்லத்துரை செல்வராணி - கந்தரோடை மேற்கு, சின்னக்குட்டி சுகந்தினி - புன்னாலைக்கட்டுவான், அண்ணாமலை கலைச்செல்வி - தப்பட்டிபுலம், கே.தயானந்தினி - கொக்குவில் மேற்கு, நவரட்ணம் ரஞ்சிதமலர் - மீசாலை வடக்கு, கந்தையா யமுனாதேவி - நெடுந்தீவு, திருமதி றிச்சாட் பேக்மன்மேரியுலேற்றா - நெடுந்தீவு, துரைராசா வசந்தினி - கோப்பாய் மத்தி., திருமதி தீவகுமார் லோஜினி - துன்னாலை கிழக்கு, திருமதி வேல்முருகன் முனீஸ்வரி - சுதுமலை தெற்கு, செல்வராசா பிறேமிளா -கோவிற்குளம், தனபாலசிங்கம் கனகமணி - கொடிகாமம், மாசிலாமணி கிரிஸ்ரா - கரம்பன் கிழக்கு, தில்லையம்பலம் சுகந்தி - நயினாதீவு, பத்மநாதன் சுதாகரன் - நயினாதீவு, திருமதி புலேந் திரன் ஜீவிதா - அச்செழு, சண்முகராஜா சுகந்தினி - ஊரெழு மேற்கு, நாகராஜா சுஜாத்தா - செம்பியன்பற்றுதெற்கு.

# இலங்கை சிறுத்தைத் தோல் இராமேஸ்வரத்தில் கைப்பற்று

## இரு சந்தேக நபர்கள் கைது

கொழும்பு, மே 13

இலங்கையிலிருந்து கடத்திவரப்பட்ட சிறுத்தைத் தோலைக் கைப்பற்றிய இராமேஸ்வரம் பொலீஸார், இது தொடர்பில் இரு சந்தேக நபர்களையும் கைதுசெய்தனர்.

6 அடி நீளமுள்ள இந்தச் சிறுத்தைத் தோல் சுமார் 4 லட்சம் இந்திய ரூபா பெறுமதியானது என பொலீஸார் தெரிவித்தனர்.

இராமேஸ்வரம் பகுதியில் விற்பனைக்காக சிறுத்தைத் தோல் ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளதாகப் பொலீஸாருக்குக் கிடைத்த தகவலொன்றையடுத்துப் பொலீஸார் வீடொன்றைச் சோதனையிட்டு சிறுத்தைத் தோலைக் கைப்பற்றினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சிறுத்தைத் தோல் இலங்கையிலிருந்து கடத்தி வரப்பட்டதாகவும், கைதுசெய்யப்பட்ட இருவரும் தற்பொழுது ராமநாதபுரம் வனத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனவும் ராமேஸ்வரம் பொலீஸார் மேலும் தெரிவித்தனர். (க)

# மூதூர் பாலைநகர் தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை

மூதூர் பாலைநகர் பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் தமிழ் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்.

சலூன் ஒன்றின் உரிமையாளரான சூர்யா (வயது - 22) என்பவரே கொல்லப்பட்டவராவார். மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு பேரே இவர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் எனக் கூறப்பட்டது.

தலையிலும், மார்பிலும் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்த நிலையில் மேற்படி இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மூதூர் பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (க)

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து




கொழும்புத்துறையைச் சேர்ந்த சிவரூபன் - கார்த்திகா தம்பதிகளின் செல்வப் புதல்வன் கஜன் தனது முதலாவது பிறந்தநாளை (18.05.2006) சனிக்கிழமை லண்டனில் அவரது இல்லத்தில் கொண்டாடுகின்றார்.

கஜன் குட்டியை அப்பா,அம்மா,ஜேர்மனியில் இருக்கும் சதீஸ் மாமா, சுகந்தன் மாமா, லண்டனில் இருக்கும் சஞ்சீவன் (குட்டி மாமா), ரஜனி அத்தை, கனடாவில் இருக்கும் குமார் பெரியப்பா குடும்பம், கொழும்பில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, ஈசன் மாமா குடும்பம், பாபு மாமா குடும்பம், காயத்திரி அத்தை (யாழ்.போதனா வைத்தியசாலை), கொழும்புத்துறையைச் சேர்ந்த தாத்தா, அம்மம்மா, ஆசை மாமா சிறி (யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவன்), பார்ட்டி, செல்வக்குமார் குடும்பம் ஆகியோர் எல்லாம் வல்ல சந்திரசேகரப் [illegible]ள்ளையார் அருளால் எல்லாச் செல்வங்களும் பெற்று பல்லாண்டு காலம் நீடுழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

தகவல்- தாத்தா ஆறுமுகம், அம்மம்மா அ.புஸ்பராணி.

இல, 36/4, கார் நீக்கந்தோர் ஒழுங்கை, கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.


முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

# Computer Hardware Engineering Course

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதளைப் பெற

உங்கள் கணனிகளை நீங்களே அமைத்துக்கொள்வதற்கான 100% பயிற்சி நெறி

◇Assembling ◇Upgrading ◇Troubleshooting ◇Fault Finding ◇Repairing ◇Servicing ◇Software Installation ◇Configuring ◇Introduction to Networking

Course Contents
- கணனி தொடர்பான அறிமுகம்
- Operating System - Windows XP & DOS
- Internet & e-mail
- கம்யூட்டரின் பாகங்களும் அவற்றின் விளக்கங்களும்
- Mother Board, Processor, Ram தொடர்பான விரிவான விளக்கம்
- கம்யூட்டரை அசெம்பிள் செய்தல்
- அசெம்பிளிங் முடிந்தவுடன் என்ன செய்வது என்பது தொடர்பான விளக்கம் (BIOS Setup)
- Hard Disk ஐ முறைப்படுத்தல்
- Software, Operating System இன்ஸ்ரோல் செய்தல்
- கம்யூட்டரில் ஏற்படும் பழுதுகளை சரிபார்த்தல்.

Course Fee :- 2000/=
Free Study Pack & Drivers CD
வகுப்புக்கள் ஆரம்பம்:-
15/05/2006 :- 08.30

Hard ware பயிற்சி
- ❖ கணனிப் பாகங்களை இனம்காணும் முறை
- ❖ Assembling
- ❖ BIOS Configurations (முறைப்படுத்தல்)
- ❖ Hard Disk முறைப்படுத்தல் (Partition & Formatting)
- ❖ Network தொடர்பான அறிமுகம்
- ❖ Troubule Shooting / Maintenance.

Software பயிற்சி
- ❖ Operating System நிறுவும் முறை (Windows 98 / Windows XP)
- ❖ Software Install செய்யும் முறை
- ❖ Driver Installation செய்யும் முறை (Sound Card,Modam,VGA,TV Card,Printer)
- ❖ Troubule Shooting (File updating, Copying)

நன்மைகள்
- ❖ பாடநெறியின் இறுதியில் கம்யூட்டர் காட்வெயார் சம்பந்தமான பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- ❖ PI முதல் P4 வரையிலான கம்யூட்டர்களில் பூரண செய்முறைப் பயிற்சி.
- ❖ எமது ஆய்வுகூடத்தில் கம்யூட்டரின் உட்தொழினுட்பம் பற்றி பூரண அறிமுகம் செய்வதால் கம்யூட்டர் பற்றிய முன்னறிவு அவசியமில்லை.

COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 15, Sirampiyadi lane , Jaffna.
Telephone :- 021-2228250 , 0777-222422


கொழும்பிலிருந்து வருகைதரும் விரிவுரையாளரால் வகுப்புக்கள் நடாத்தப்படும்

ஏனைய அனைத்துக் கணனிக்கற்கைநெறிகளிற்கான புதியபிரிவுகள் [illegible]

13/05/2006, 14/05/2006 Morning :- 10.30, Evening :-03.00


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 09 - 05 - 1938



உதிர்வு 13 - 04 - 2006

## அமரர் ஆறுமுகம் வைரமுத்து

(வி.பி.என். ஆலை உரிமையாளர், கண்டி றோட், மீசாலை)

அன்பு நிறை அப்பாவாய், ஆதர்ச கணவனாய்
ப்ண்பு நிறை தாத்தாவாய் பாரிலுள்ளோர்க் கண்ணனாய்
அன்பாலே அணைத்தீர் அறுபத்தெட்டதனில்
ஆண்டவன் அழைத்தானோ அவசரமாய் நீர் விரைய
நினைந்துருகி நாமும் நிலைத்திடப் பிரார்த்திப்போம்.

இன்று (13.05.2006) சனிக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

*வி.பி.என். ஆலை,*
*கண்டிறோட், மீசாலை.* (50181) - குடும்பத்தினர்.

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 30 - 12 - 1930



உதிர்வு 13 - 05 - 2002

அமரர்

## தம்பையா கணபதிப்பிள்ளை

*(ஓய்வுபெற்ற எரிபொருள் முகாமையாளர் - புலோலி)*

நான்காண்டு ஓடி மறைந்தாலும்
எம் நினைவில் நீங்கள் மறையவில்லை
வாழ்வாங்கு வாழ்ந்திருந்தீர் - பூமியில்
வானுறையும் தெய்வத்திடம் சென்றீரோ
உங்கள் ஆத்மசாந்திக்காக்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*மாவில் வீதி, புற்றளை,*
*புலோலி தெற்கு, புலோலி.* (50171) - மனைவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடை வைத்தியர்கள் பற்றாக்குறை மன்னாரில் பண்ணைத் தொழில் பாதிப்பு

பரந்தன்,மே13

கால்நடை வைத்தியர்கள் போதியளவு இல்லாத காரணத்தினால் மன்னார் மாவட்டத்தில் கால்நடை வளர்ப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அத்துடன், மாவட்ட ரீதியாகக் கால்நடை உற்பத்தி வீழ்ச்சியடைந்தும் வருகின்றது.

இத்தகவலை மன்னார் மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் தூயவன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் மாவட்டத்தில் விவசாயச் செய்கையுடன் மக்கள் கால்நடை உற்பத்தியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

கால்நடைகள் மூலம் பெறப்படும் பாலினை, பால்பொருள் உற்பத்தி நிறுவனம் கொள்வனவு செய்து வருகின்றது. ஆனால், கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்த் தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கான கால்நடை வைத்தியர்கள் இல்லாத காரணத்தினால் கால்நடைகளை உற்பத்தி செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதன் காரணமாகப் பெரும்பாலானோர் கால்நடை வளர்ப்பை இடைநிறுத்தியுள்ளனர்.

முருங்கனுக்கும் மன்னார் பகுதிக்கும் என இரண்டு கால்நடை வைத்தியர்கள் இருக்கின்றார்கள்.

இவர்களுக்குக் கீழ் கால்நடை ஆரம்ப மருத்துவ உத்தியோகத்தர்கள் சிலரும் உள்ளனர். ஆனால், மன்னார் மாவட்டத்தின் தேவையின் அளவுக்கு இது போதுமானதாக இல்லை. இதனால் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்த் தாக்கங்கள் பற்றி முன் எச்சரிக்கை மற்றும் ஆலோசனைகளை வழங்க முடியாதுள்ளது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு கால்நடை உற்பத்தி அதிகரிக்குமானால் மன்னார் மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரம் ஓரளவு உயர்வடையும் - என்றார் அவர். (352)

## பலநோக்கு மண்டபம் மன்னாரில் திறந்துவைப்பு

மன்னார்,மே13

நியாப் II திட்டத்தின் கீழ் தாராபுரத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பலநோக்கு மண்டபம் திறந்துவைக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் நியாப் திட்டம் II இன் கீழ் முதன்முதலாக நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட கட்டடம் இதுவாகும்.

நியாப் திட்டத்தின் II ஆம் கட்டத்தின் கீழ் தாராப்புரத்தில் சுமார் 10 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதில் முதற்கட்டமாகவே சுமார் 12 இலட்சம் ரூபா நிதியில் குறித்த பலநோக்கு மண்டம் நிர்மாணிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த செவ்வாய் அன்று இந்நிகழ்வு நடைபெற்றது.

அதேவேளை 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் மன்னார் அரச அதிபருக்கான உத்தியோக பூர்வ வதிவிடம் 16 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளதாக மன்னார் 'நிக்கொட்' திட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## 'சீடொட்' நிறுவனத்தின் மதியொளி நிகழ்வு

கிளிநொச்சி, பாரதிபுரம் மகா வித்தியாலயத்தில் தமிழர் சமூகபொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் மதியொளி திட்ட நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற் றது.

இத்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட நான்கு மாணவர்களுக்குக் கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கப்பட்டது. பாடசாலை அதிபர் இராசேந்திரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நிறுவனத்தின் பணிப்பாளர் க.செல்வநாயகம் கலந்துகொண்டு நிதியினை மாணவர்களிடம் கையளித்தார். இந்நிகழ்வுக்கான நிதியினை, புலம்பெயர்ந்து கனடாவில் வசிக்கும் அன்பர்கள் குகன் சிவனந்தன், அகிலன் மயில்வாகனம், வின்சன் சின்னத்துரை ஆகியோர் வழங்கி உதவியமை குறிப்பிடத்தக்கது.

மதியொளித் திட்டமானது தமிழர் தாயகப் பகுதிகளில் தமது கற்றல் தேவைகளை பெற்றுக்கொள்வதில் சிரமப்படும் மாணவர்களை ஊக்குவிக்குமுகமாக மேற்கொள்ளப்படும் திட்டமாகும்.

இத்திட்டம் தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தினால் இரண்டு வருடங்களுக்கு மேலாக தமிழர் தாயகப் பகுதிகளிலுள்ள நான்கு பாடசாலைகளில் ஏற்கனவே நடைமுறையிலுள்ளது. இத்திட்டத்திற்கூடாக பயனாளி ஒருவருக்கு மாதாந்தம் ரூபா ஆயிரம் வீதம் கல்வியை நிறைவு செய்யும் வரை வழங்கப்படுகிறது. இத்திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் முழுங்காவில் பிரதேச கால்நடை வளர்ப்போருக்கான கருத்தமர்வு ஒன்று அண்மையில் நடைபெற்றது. இதில் பூநகரிப் பிரதேச கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் சூரியகுமார் கருத்துரை வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படத்தில் காணலாம். *(படம்: வெள்ளங்குளம் செய்தியாளர்)*

## தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன

பரந்தன்,மே13

வருமான அதிகரிப்புத் திட்டத்தின் கீழ் மாவடிக் கிராமத்தில் பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

'போரூட்' நிறுவன நிதி உதவியுடன் கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தின் ஒழுங்குபடுத்தலில் வட்டக்கச்சி மாவடிக் கிராமத்தில் மூன்று பயனாளிகளுக்கு ஒவ்வொன்றும் தலா 18 ஆயிரம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 2 ஆம் திகதி காலை 9 மணியளவில் கிளிநொச்சி புனர்வாழ்வு நிறுவனத்தின் இணைப்பாளர் சி.சிவறஞ்சினி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் திருமாறன், நிறுவன உதவிப் பணிப்பாளர் கீதன், மாவடி ஊரக மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் நாகராசா, நிறுவன உப தலைவர் இ.இராசேந்திரம், போரூட் பிரதிநிதி அனுசா ஆகியோர் கலந்துகொண்டனர். (352)

## முன்பள்ளி ஆசிரியருக்கு பயிற்சி நெறி

கிளிநொச்சி,மே13

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறியொன்று கிளிநொச்சியில் நேற்று ஆரம்பமானது. மூன்று நாள்களைக்கொண்ட இப்பயிற்சிநெறி தமிழர் புனர்வாழ்வுக் கழகம், உலகதரிசன நிறுவனம், கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனை ஆகியவற்றுடன் இணைந்து முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிறுவனத்தினால் நடத்தப்படுகின்றது.

இந்தப் பயிற்சி வகுப்பின் ஆரம்ப நிகழ்வு நேற்றுக் காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றிய மண்டபத்தில் நடைபெற்றது.

## நீர் வெறுப்பு நோய் பற்றிய கலந்துரையாடல்

கிளிநொச்சி,மே13

வன்னிப் பகுதியில் அதிகரித்துவரும் நீர் வெறுப்பு நோயைக் கட்டுப்படுத்துவது பற்றிய விசேட கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 16ஆம் திகதி காலை 10 மணிக்கு கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர், சுகாதார வைத்திய அதிகாரிகள், மேற்பார்வைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், கால்நடை மருந்துவர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், நகர சபைச் செயலாளர்கள், பிரதேச சபைச் செயலாளர்கள் ஆகியோரைத் தவறாது கலந்துகொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கு உதவி

ஆழிப்பேரலையால் தமது தாய், தந்தையரை இழந்த பிள்ளைகளுக்கு உதவி வழங்கும் நிகழ்வும் பாதுகாவலர்களைக் கெளரவிக்கும் நிகழ்வும் கடந்த மாதம் 25ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு கள்ளப்பாடு, தற்காலிக குடியிருப்பு பொதுநோக்கு மண்டபத்தில் சிறுவர் பராமரிப்பு நன்னடத்தை உத்தியோகத்தர் வீ.சிவபாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கருத்துரைகளை கரைத்துறைப்பற்று கோட்டக்கல்வி அதிகாரி ம.அன்ரனி ஜெயநாதன், கள்ளப்பாடு வடக்கு கிராம அலுவலர் தெய்வேந்திரம், கள்ளப்பாடு தெற்கு கிராம அலுவலர் மோகன், கரைத்துறைப் பற்று சமூக சேவை உத்தியோகஸ்தர் திருமதி பிரேமா விமலேந்திரன் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

தொடர்ந்து பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கான நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் அவர்களது பாதுகாவலர்களும் கெளரவிக்கப்பட்டனர். (352)

## சாந்தி, மாறன் சிறுவர் இல்லங்களின் முதலாமாண்டு விழா மல்லாவியில்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவில் மல்லாவிப் பிரதேசத்தில் இயங்கும் சாந்தி மற்றும் மாறன் சிறுவர் இல்லங்களின் முத்லாம் ஆண்டு நிறைவு விழா சாந்தி இல்ல மேற்பார்வையாளர் செல்வி கோணேஸ்வரி தலைமையில் கடந்த ஆறாம் திகதி இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரை மல்லாவி கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் அருந்தவமும் தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப்பொறுப்பாளர் சின்னண்ணையும் ஏற்றினர்.

மேஜர் மாறனின் திருவுருவப் படத்திற்கு அவரின் தந்தையார் ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தார்.

அதன் பின்னர் ஆரம்பித்த நிகழ்வுகளில் சிறப்புரையை சிறுவர் இல்லங்களின் பணிப்பாளர் ரவி நிகழ்த்தினார். தமிழர் புனர்வாழ்வுக் கழக துணை நிறைவேற்றுப் பணிப்பாளர் நீகன் கலை நிகழ்வுகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில் வழங்கிக் கௌரவித்தார்.

தொடர்ந்து மாணவர்களின் கையெழுத்து சஞ்சிகைகளான 'மாணவர் உலா', 'உதயம்' ஆகியவை வெளியிட்டு வைக்கப்பட்டன. மாணவர்கள் அவற்றை வெளியிட்டு வைக்க நீகன், மல்லாவி மத்திய கல்லூரி உப முதல்வர் திருமதி புஸ்பவதி ஆகியோர் பெற்றுக் கொண்டனர். (352)

## தமிழீழ சுகாதார சேவையின் நடமாடும் மருந்துவப் பிரிவில் 3 ஆயிரத்து 461 பேருக்குச் சிகிச்சை

தமிழீழ சுகாதார சேவைகளின் நடமாடும் சிகிச்சைப்பிரிவில் கடந்த மாதம் 3 ஆயிரத்து 461 நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளதாக தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.வாமன் தெரிவித்துள்ளார்.

இந்த நோயளார்களில் ஆயிரத்து 484 பேர் வைரஸ் காய்ச்சலுக்கும் சுவாசத் தொற்று நோய்க்கும் சிகிச்சை பெற்றுள்ளனர் எனவும் இவர்களில் 80 வீதமானோர் சிறுவர்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தனிநபர் சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிப்பதன் மூலமும் பாதுகாப்பான குடிதண்ணீரைப் பருகுவதன் மூலமும் கோடைகால நோய்களான சருமத் தொற்று, வயிற்றோட்டம், நெருப்புக்காய்ச்சல் ஆகிய நோய்களிலிருந்து தப்பிக் கொள்ளமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

## விளான்குளத்தில் தற்காப்புப் பயிற்சி

பரந்தன்,மே13

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வன்னி விளாங்குளம் பகுதி மக்களுக்கான தற்காப்பு பயிற்சி முகாம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஆரம்ப நிகழ்வில் பொதுச் சுடரை கிராமிய அபிவிருத்தி வங்கி உதவிப் பணிப்பாளர் கலைவாணன் ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசிக் கொடியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணை ஏற்றிவைத்தார். இதனைத் தொடர்ந்து மக்களுக்கான தற்காப்பு பயிற்சியினை வன்னி விளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் சைமன் ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் சிறப்புரையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் வழங்கினார்.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பொதுமக்கள் தம்மை எதிரியிடம் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான தற்காப்பு பயிற்சியைப் பெற்று வருகின்றனர். இதே போன்று வன்னிப் பெருநிலப்பரப்பு எங்கும் மக்கள் தாமாகவே முன்வந்து தற்காப்பு பயிற்சியைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (352)

## பசுமை வேளான் சேவை நிலையம் ஒலுமடுவில் அண்மையில் திறப்பு

கிளிநொச்சி,மே13

வவுனியா மாவட்டத்தில் பசுமை வேளாண் சேவை நிலையம் திறப்பு விழாவும் பயிர் உற்பத்தியாளர்களுக்கு மானிய அடிப்படையில் பயிர் விதைகள் உள்ளீடுகள் வழங்கும் நிகழ்வும் கடந்த 3ஆம் திகதி மாலை 4 மணிக்கு ஒலுமடு கிராமத்தில் ஒலுமடுப் பிரதேச தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு இணைப்பாளர் சதீஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரினை ஒலுமடு பிரதேச கமக்கார அமைப்புத் தலைவர் செ.பூபாலபிள்ளை ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து பசுமை வேளாண் சேவை நிலையப் பெயர்ப்பலகையை வவுனியா மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் இ.ராம் திரைநீக்கம் செய்து வைத்தார். நிலையக் கட்டடத்தினைத் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இதனையடுத்து இப்பகுதியிலுள்ள மக்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்புக்கும் பயிர் உற்பத்தி ஊக்குவிப்புக்கும் பயனாளிகளுக்கு தலா 5 ஆயிரம் ரூபா பணமும் ஒரு பயனாளிக்கு நல்லின கறவை மாடும் வவுனியா மாவட்ட தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் வழங்கப்பட்டது. (307)

## உதவி மருத்துவர் தேர்வில் 6 பேர் சித்தியடைந்தனர்

தமிழீழ சுகாதார சேவையினரால் நடத்தப்பட்ட உதவி மருத்துவர் கற்கை நெறியின் இறுதியாண்டுப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின.

இந்தத் தேர்வில் 6 பேர் உதவி மருத்துவர்களாகச் சித்தியடைந்துள்ளனர். இதில் மூவர் இரண்டாம் வகுப்புச் சித்தியும் மூவர் சாதாரண சித்தியும் பெற்றுள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:

*2ஆம் வகுப்புச் சித்தி* - எம். எழிலரசி, எஸ்.சிவலதா, வீ.சிவமலர்.

*சாதாரண சித்தி* - பி. ஜெனதா, எம்.சுகுமார், வி. விஜயசாந்தி

இவர்கள் தாயகத்தில் உருவான முதற் தொகுதி உதவி மருத்துவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள இறக்குமதி செய்யப்பட்ட **ISUZU-4HGI** என்ஜின் கியர் **Box** உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777382343. (50167)

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

நல்ல இன அல்சேஷன் நாய்க்குட்டிகள் (ஆண்) விற்பனைக்குண்டு. தொடர்பு: இ.மனோகரன், மாரியம்மன் கோயிலடி, சுதுமலை தெற்கு, ஆனைக்கோட்டை. (50175)

### வீடு விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு, மெயின் வீதியில் 4½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 4202623. (சி/49187)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

**Prima, Broiler** மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (**Electronic** நிறுவை.(நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/49260)

### தவறிவிட்டது

செல்வி தனுசா புவனசுந்தரம் என்பவரின் தேசிய அ.அட்டை (866272956V), விசேட அ.அட்டை என்பன 06.05.2006 அன்று பெருமாள் கோயில் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நியூ லக்சுமி ரேடர்ஸ், கொக்குவில் சந்தி அல்லது நாகலிங்கம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும் தொ.பே: 021-222-2928, 021-4591314. சன்மானம் வழங்கப்படும். (50177)

### தவறிவிட்டது

வெளிநாட்டில் இருந்து வரும் போது தனது நோய்க்கு பயன்படுத்துவதற்காக எடுத்துவரப்பட்ட ஆங்கில மருந்து வகைகள் அடங்கிய சிறிய பை ஒன்று முகமாலையில் கடந்த வியாழக் கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் வரும் முகவரியில் ஒப்படைத்துதவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**ஜெயா கொமினிக் கேசன்,**
**இராச வீதி, அச்சுவேலி.** (சி-49261)
தொ.பே.: 0602212599, 0777 180510

### மணப்பெண் தேவை

யாழ்.இந்து கௌரவ, 1975 ஆம் ஆண்டு, 8 இல் செவ்வாய், மூலம் 2 ஆம் பாதம், கனடாவில் நிரந்தர குடியுரிமை பெற்று அங்கு சுய தொழில்புரியும் நற்பண்புள்ள மணமகனுக்கு அழகிய படித்த மணப்பெண்ணை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஜாதகம், புகைப்படத்துடன் தொடர்புகொள்ளவும். பொருத்தமற்றவை திருப்பி அனுப்பப்படும்.K.M.T.Rajah, 177, Old moor street, Colombo-12, T.P.:0714353000. (50177)

### வீடற்றவன் நாவல்

O/L மாணவர்களே! தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களே! வீடற்றவன் நாவலின் கதைச் சுருக்கம், விளக்கம், விமர்சனம் எல்லா வகை இலக்கியங்களும் படைத்த கலாபூசணம் அராலியூர் சுந்தரம்பிள்ளை எழுதியது. இரண்டாம் பதிப்பு ரூபா 75. (50172)

### கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட (**Original Prima Broiler**) குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 22-05-2006 திங்கட் கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். முற்பதிவு செய்துகொள்ளவும். எமது பருத்தித் துறை, நெல்லியடிக் கிளைகளிலும் சூட்டி பாம்-வட்டுக்கோட்டை, உடுவில் பாம், உடுவில், நல்லூர் பாம் சென்ரர், 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (C/49259)

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1975 பரணி நட்சத்திரம், 7 இல் செவ்வாய், பாவம் 51, விஞ்ஞான ஆசிரியையாக உள்ள மணமகளிற்கு மணமகன் தேவை. தொடர்பு: தொ.பே.: 0776179439. (50183)

## இந்துக் குரு வீட்டுக்கு குண்டுவீச்சு!

புத்தளம்-மன்னார் வீதியிலுள்ள முத்துமாரியம்மன் கோயில் பிரதம குருவான சுந்தரக் குருக்களின் வீட்டின்மீது இனந்தெரியாத நபர்கள் கைக்குண்டொன்றை வீசியதனால் வீட்டின் முற்றத்தில் குழியொன்று ஏற்பட்டுள்ளதுடன், வீட்டிற்கு சிறிய சேதமும் ஏற்பட்டது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் கடந்த புதன் கிழமை இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தினால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. (256)

# அழிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தால் பதில் தாக்குதல் நடத்தியே தீருவோம்

## பொங்கியெழும் மக்கள் படை எச்சரிக்கை

''யாழ். குடாநாட்டின் அப்பாவித் தமிழ்மக்கள் மீதான படையினரின் அழிப்பு நடவடிக்கை தொடர்ந்தால் அதற்கு நாமும் பதில் தாக்குதல்களை நடத்தியே தீருவோம்'' - இவ்வாறு எச்சரித்துள்ளது யாழ்.மாவட்ட பொங்கியெழும் மக்கள் படை.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றினையும் மக்கள் படை விடுத்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.குடாநாட்டின் பலபகுதிகளிலும் அரச படைகள் சுவரொட்டிகள் மூலம் 'பயங்கரவாதிகள்'' தம்மீது தாக்கப்போகின்றனர் எனவும் தமிழ்மக்களை அழிக்கத்திட்டமிடுள்ளனர் எனவும் அதிலிருந்து உங்களைப் பாதுகாக்கப் பாதுகாப்புப் படையினராகிய தாங்கள் பயங்கரவாதிகளை அழிக்கும் நடவடிக்கையினை மிகக் குறுகியகாலத்தில் மேற்கொள்ளப்போகின்றனர் எனவும் அறிவித்துள்ளனர்.

அதுமட்டுமல்லாமல், வீதிகளில் தெருவோரங்களில் நிற்கவும் வேண்டுமாம் இதன் உள்நோக்கம் மக்களுக்கு நன்கு புரிந்திருக்குமென நாம் நம்புகின்றோம். இதனை விரிவாக நோக்குமிடத்து அப்பாவிகள் மீதான சிங்களப் பேரினவாதிகளின் பாரிய கொலை வெறியாட்டம் அரங்கேறப்போகின்றது என்பது தெளிவாகின்றது. வீதிகளில் செல்வோர் வயது வேறுபாடின்றிச் சுடப்படுவார் என்பதையும் இச்சுவரொட்டிகள் மூலம் படையினர் பகிரங்கப்படுத்தியுள்ளனர்.

அரச படைகளினால் தென்னிலங்கையில் இருந்து வரவழைக்கப்பட்ட காடையர் கும்பலும் தயாராகவுள்ளது என்பதையும் நாம் அறிவோம். அழிப்பு நடவடிக்கை தொடர்ந்தால் அதற்கு நாமும் பதில் தாக்குதல்களை நடத்தியே தீருவோம்! இதற்கு இடையூறாக எமது உறவுகள் இருக்கக் கூடாது என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். நீங்கள் வெளியேறி தாக்குதலுக்கு வழி விடுவீர்கள் என்ற நம்பிக்கையோடு இதனைப் படைகளுக்கு எச்சரிக்கையாகவும் எம் இனிய உறவுகளுக்கு அவசர செய்தியாகவும் விடுக்கின்றோம்.

யார் யாருக்குப் பயங்கரவாதிகள்? தம்மைப் பாதுகாத்துக் கொள்ளமுடியாத காடையர் கும்பல் எமது மக்களைப் பாதுகாப்பதா? அவர்களுக்குப் புரியும் மொழியில் பதில் விரைவில் சொல்வோம். (ம)

# அரச ஊழியரை பணிக்குத் திரும்பும்படி பலாலி இராணுவம் கட்டாய உத்தரவு!

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அரச ஊழியர்களை நேற்று முன்தினம் முதல் கட்டாயமாக கடமைக்குச் சமுகம் தரும்படி யாழ். இராணுவக் கட்டளையிடும் அதிகாரி உத்தரவிட்டிருக்கின்றார்.

மே 10 ஆம் திகதியிட்டு பலாலி இராணுவ முகாமிலுள்ள பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத்தில் இருந்து கட்டளையிடும் அதிகாரிக்குப் பதிலாக மேஜர் ஜே.பி. எம்.டி. ஏ. விஜேசிங்க அனுப்பி வைத்த விசேட செய்திக் குறிப்பில் இந்த உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

'யாழ்ப்பாணமாவட்டத்தில் உள்ள அரச ஊழியர்களுக்கான விசேட அறிவித்தல்' என்ற தலைப்பில் அமைந்துள்ள இந்த உத்தரவில் -

''குடாநாட்டு மக்களுக்கு உங்களின் சேவை மிகவும் அத்தியாவசியமானதால் இதுவரைக்கும் கடமைக்குத் திரும்பாத சகல அரச ஊழியர்களும் தங்கள் கடமை செய்யும் காரியாலயங்களுக்கு 2006.05.11 ஆம் திகதி முதல் கட்டாயமாக கடமைக்கு சமூகமளிக்க நடவடிக்கை எடுக்கவும்.'' - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குடாநாட்டில் தொடரும் தாக்குதல்களை ஆட்சேபித்து முழுப் பணிப்புறக்கணிப்பில் குடாநாட்டுப் பிரதேசமக்கள் ஈடுபட்டிருக்கையில் இவ்வாறு கட்டாயமாகப் பணிக்குத் திரும்பக் கோரும் அச்சுறுத்தல்-உத்தரவு படைத்தரப்பிலிருந்து வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

### விற்பனைக்கு

புத்தம் புதிய சொற்ப நாள்கள் பாவித்த கீரோ ஹொண்டா சி.டி.டவுன் (Hero Honda-CD Dawn) மரூன் கலர் மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ள வேண்டிய தொ.பே.இல. **0777-116132** சனி, ஞாயிறு பார்வையிடலாம். (50187)

## கலைஞர்களுக்கான மாபெரும் கலக்கல்

யாழ். சிறீக்குமரன் இசை மன்றத்தால் நடத்தப்படும் கலைஞர்களுக்கான மாபெரும் கலக்கல் போட்டி எதிர்வரும் 25-05-2006 அன்று பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் மஞ்சவனப்பதி கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடகர்,பாடகிகள்,அறிவிப்பாளர், பெண் அறிவிப்பாளர், தபேலா, மிருதங்கம், ஓகன், லீட் கிற்றார், பேஸ்கிற்றார்,ட்ரம்ஸ், ஒக்தபாட் ஆகிய வாத்தியக் கலைஞர்களுக்கான போட்டி நடைபெறவுள்ளது. வெற்றி பெறும் கலைஞர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

இப்போட்டிக்கான உங்கள் விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரியில் தினமும் பி.ப. 3.30-6.30 மணிவரை விண்ணப்பக்கட்டணம் ரூபா 200 செலுத்தி நேரில் சமர்ப்பிக்கவும்.

**விண்ணப்ப முடிவு திகதி 20.05.2006**

**சிறீக்குமரன் இசை மன்றம்,**
பிரம்படி வீதி,கொக்குவில் கிழக்கு,கொக்குவில்.
தொலைபேசி-0776531167. (50182)

## மலிவு விலையில்
## விமான பயண ஒழுங்குகளுக்கு

**யாழ்.- கொழும்பு-யாழ்.**

**THAMPI**

*யாழ்.*:-90, கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.:222-2040, 222-2504, 222-2823.
*கொழும்பில்.*:-296/D4, காலி வீதி, வெள்ளவத்தை.
தொ.பே.:0112360959, 0777 382343. (50166)

# IMMEDIATE VACANCY

**solidar**
An INGO consortium including NPA, SAH and ASB

Solidar is a consortium of organizations of 12 European countries that supports a broad portfolio of projects. The Solidar network in Sri Lanka comprises of three international, NGOs – Arbeiter Samariter Bund (ASB), Norwegian People's Aid (NPA) and Swiss Labour Assistance (SAH).

Under the Village Rehabilitation and Development Physical Infrastructure Program, Solidar will be implementing the construction of more than 1000 permanent houses for Tsunami Affected families in Vadamarachchi East.

**Position: Electricians ( No of Positions 06)**

**Qualifications:**

- Those who have followed an Electrical house wiring course (minimum of 6 months)
- The candidate should have minimum of 2 years of experience. In relevant field.
- The knowledge in plumbing or mechanical qualification is considered as additional qualification.

Interested candidates MUST posses the minimum requirements stated above. The applications should be addressed to Mr. S. Jayasekaran-Project Officer (Electrical Projects) on or before 20th May 2006.

**Solidar, No. 156 Jaffna Road, Paranthan**

Norwegian People's Aid | Arbeiter-Samariter-Bund Deutschland e.V. | Swiss Labour Assistance

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு வள்ளிப்பிள்ளை

நயினாதீவு, 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு வள்ளிப்பிள்ளை அவர்கள் நேற்று (12.05.2006) வெள்ளிக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3 ஆம் வட்டாரம், நயினாதீவு. (சி-49262)

தகவல்:
**மு.துரைரெத்தினம் (மகன்),**
**கோ.வாமதாஷன் (மருமகன்).**

## பொன்னுச்சாமி கனகசுந்தரம்

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், தபாலகம், யாழ்ப்பாணம்)

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் சங்குவேலி தெற்கை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனை வசிப்பிடமாகக் கொண்ட பொ.கனகசுந்தரம் அவர்கள் 09.05.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுச்சாமி மற்றும் கனகாம்பிகை தம்பதியினரின் மகனும் சின்னத்துரை தம்பதியரின் மருமகனும் சிவநாகேஸ்வரியின் பாசமிகு கணவரும் சிவதரன் (பிரான்ஸ்), கார்த்திகா (அமரர்), பார்த்திபன் (லண்டன்)ஆகியோரின் அன்புத் தந்தையும் சி.பரமேஸ்வரி (பிரான்ஸ்), பா.நயனி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் நவநீதராசா (அமரர்), மகேந்திரராசா (பிரான்ஸ்), விபுலானந்தராசா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பபிசான், புளோறியான், மைலா, றீமா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் திங்கட்கிழமை 15.05.2006 லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

U.K.
T.P.:00441512631812. (50185)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## அருணாசலம் கிருஸ்ணராசா

(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)



இல.31, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவரும் ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தருமான அருணாசலம் கிருஸ்ணராசா 11.05.2006 வியாழன் அன்று காலமானார்.

இவர் லீலாவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மனோகர், காலஞ்சென்ற சரோஜினி (ரஞ்சி), காலஞ்சென்ற பத்மநாதன் (ரவி), கிருஸ்ணகுமார்(ரஞ்சன்-பெயின்ரர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் துளசிராணி(ராணி)யின் மாமனும் திவ்வியாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11.05.2006 வியாழன் மாலை நடைபெற்று பூதவுடல் வில்லூன்றி மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.31, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (50184)

தகவல்:
மனைவி **லீலாவதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் படுகொலைகளை அம்பலப்படுத்தி சர்வதேச ரீதியில் அவர்களைத் தடைசெய்க!

## நாடாளுமன்றில் ஹெல உறுமய தலைவர் காட்டம்

கொழும்பு,மே13

''தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கையில் மேற்கொண்டுவரும் மிலேச்சத்தனமான படுகொலைகளை சர்வதேச நாடுகளுக்கு அம்பலப்படுத்த - அவர்களைத் தடைசெய்ய - வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதுவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.''

''அவ்வாறு செய்யாவிடில் எமது நாட்டைச் சீரழித்து எமது மக்களையும் மற்றும் எமது தலைவர்களையும் புலிகள் கொன்று குவித்துவிடுவார்கள்.''

- இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் வண எல்லாவல மேதானந்த தேரர் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் இடம்பெற்ற அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மறைவையொட்டிய அனுதாபப் பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றும்போது கூறினார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

இந்த நாட்டின் நலனுக்காகப் பாடுபட்டமைக்காகப் புலிகளால் படுகொலைசெய்யப்பட்ட ஒரு பெருந்தலைவர் லக்ஷ்மன் கதிர்காமரைப் பற்றிப் பேசுவதற்காக நாம் இந்த இடத்தில் கூடியிருக்கின்றோம். புலிகளின் கொலைப் பட்டியலில் முதல் இடத்தைப் பெற்றிருந்தார் கதிர்காமர்.

புலிகளின் மிலேச்சத்தமான தாக்குதல் அத்தோடு நின்றுவிடவில்லை. இன்னும் தொடர்ந்துகொண்டேதான் இருக்கிறது. நீண்ட நாள்களாகத் திட்டம் தீட்டியே கதிர்காமரைக் கொலைசெய்தனர் புலிகள். அவர்கள் எம்மையும் கொலைசெய்யத்திட்டம் தீட்டியிருக்கமாட்டார்கள் எனச் சொல்லமுடியாது.

புலிகளின் செயலால் எமது நாட்டு மக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது.

இராணுவத் தலைமையகத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் நாட்டின் முழுப்பாதுகாப்பையும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

ஒரு கர்ப்பிணித் தாய் ஒருவரையும் வைத்து இத்தாக்குதலை நடத்தியதன் மூலம் புலிகள் எப்படியான கொடுமையான பயங்கரவாதிகள் என்பதை நாம் அறியலாம்.

ஒரு மிருகம் கர்ப்பிணியாக இருந்தாலும்கூட அதற்கு நாம் பரிவுகாட்டுவதுண்டு. ஒரு கர்ப்பிணிப் பெண்ணுக்கு அதிகமாகவே பரிவு காட்டப்படுகிறது. அதைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு புலிகள் இத்தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனச் சொல்லப்படுகிறதே தவிர, ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பேசுவதைவிட்டுவிட்டு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவேண் டும்.

புலிகளிடமிருந்து எம்மைப் பாதுகாக்க யுத்தம் ஒன்று செய்யவேண்டும் என நாம் சொல்லவில்லை. புலிகளின் தாக்குதலை எதிர்க்க எமது முப்படைகளும் பலப்படுத்தப்படவேண்டும் என்றுதான் சொல்கிறோம்.

வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ் மக்களில் 98 வீதமானவர்கள் புலிகளின் வன்முறைக்கு எதிரானவர்கள். ஆனால், அவர்களால் சுதந்திரமாகத் தங்களது கருத்துகளைச் சொல்லமுடியாது.

இந்தநிலையில், புலிகளின் வன்முறைகளைச் சர்வதேச நாடுகளுக்கு விளக்கிக் கூறி அவர்களை வெளிநாடுகளில் தடைசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும். வெளிநாடுகளிலுள்ள எம் நாட்டுத் தூதுவர்கள் இந்த நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் - என்றார். (க)


## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7533140 முதல் 7542015 வரை. சீட்டிழுப்பு இல. 235 திகதி 11-05-2006

வெற்றி எண்கள்

7 2 2 0 4 7 — சுப்பர் எண் 07

ஜக்பொட் பரிசு ரூ. 13,667,625/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 13,667,625/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 07 | 50,000/= | 350,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 74 | 5,000/= | 370,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 759 | 500/= | 379,500/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 7618 | 50/= | 380,900/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 75443 | 10/= | 754,430/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/= | 45,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 78 | 1,000/= | 78,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 759 | 100/= | 75,900/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 7534 | 20/= | 150,680/= |
| | | | மொத்தம் ரூ. 3,584,410/= |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 4,187,010/-

ரூ. 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தளை | 7533460-1-08 |
| காலி | 7535385-4-03 |
| புத்தளம் | 7541902-6-58 |
| திருகோணமலை | 7538805-0-62 |
| நுவரேலியா | 7536015-0-51 |
| பொலன்னறுவ | 7538141-6-59 |
| கண்டி | 7534217-0-71 |
| அநுராதபுரம் | 7536120-5-03 |

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூ. 13,879,300/-

தொடர் இல. 6629730 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 மே 15 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.


## பரிபாலன சபைக் கூட்டம்

சாவகச்சேரி-சங்கத்தானை வைரவ சுவாமி -கந்தசுவாமி ஆலய பரிபாலன சபையின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

## உயர்தரப் பரீட்சை ஆளணியினருக்கு

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை தொடர்பான கடமைகளில் ஈடுபடுபவர்களுக்கு யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்த அறிவுறுத்தல் கூட்டம் தவிர்க்கமுடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் 15ஆம்திகதி திங்கட்கிழமையும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் அறிவுறுத்தல் கூட்டம் திட்டமிட்டபடி நடைபெறும் எனப் பிரதிப் பரீட்சை ஆணையாளர் ஆ.சிவலிங்கம் அறிவித்துள்ளார். (11)

### புனித பார்பரம்மா ஆலய வருடாந்த திருவிழா

11.05.2006 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது,

13.05.2006 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை வழிபாடும்,

14.05.2006 ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும்.

திருநாள் திருப்பலியில் பங்கு கொண்டு புனிதரின் ஆசியைப் பெற்று வாழ அழைத்து நிற்கின்றோம்.

இத்தாவில், பளை. ஆலய நிர்வாகம்.


**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்

மனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்

பீட்டர் ஜாக்சனின்

கிங் - கொங் King Kong

தங்கத் தமிழ் மொழியில்

(பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை)

காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30, 9.30

**ராஜா** யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு

பரத், மல்லிகா கபூர் நடித்த

அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது

10.30, 2.30, 6.30, 9.30 முற்பதிவு செய்துகொள்ளலாம்

**நாகம்ஸ்** சுன்னாகம்

ரஜினி, ரோஜா, ராதாரவி நடித்த.

உழைப்பாளி

காட்சி நேரம் 10.30 2.30


## மரண அறிவித்தல்

### தம்பையா சுப்பிரமணியம்
### (சவாரிச் சுப்பண்ணை)



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் சங்கானை, சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சுப்பிரமணியம் நேற்று(2006.05.12) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும் கணபதிப்பிள்ளை மனோன்மணியின் அன்பு மருமகனும் புஸ்பதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பரந்தாமன் மற்றும் சாந்தகுமார்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுபாசினியின்(லண்டன்) அன்பு மாமனும் காலஞ்சென்றவர்காளான சுந்தரமூர்த்தி, நடராசா மற்றும் இராசரத்தினம், தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(2006.05.14) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு சித்தன்கேணியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிள்ளையார் கோயிலடி, சித்தன்கேணி.* (50196) தகவல்: மனைவி

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நல்லம்மா சோமசுந்தரம்
### (மகேஸ்வரி)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா சோமசுந்தரம் அவர்கள் நேற்று (12.05.2006) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சி.சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - பொன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட மகளும் காலஞ்சென்ற சங்கநாதபிள்ளை மற்றும் திருமதி மங்கையர்க்கரசி சுப்பிரமணியம், திருமதி கண்ணம்மா தருமலிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர் யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை தற்போது நியூசிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரியும் யோகராணி, சிவயோகநாதன்(U.K.), யோகேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும் பத்மநாதன் (ஓய்வுபெற்ற பரிசோதகர் C.T.B. திருகோணமலை), யலீந்திரா (U.K.), ஜெயபவானி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் பத்மரூபன் தனுஜா (U.K.), பத்மதீபன் (தரவு பதியுநர் -யா/பொதுநூலகம்), சதாஜினி, லாவண்யன், பிறிண்டா (U.K.), யுட்சன், யுசியா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மிருதுன்ஜன், சாகிர்த்யா ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-05-2006) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**53, கே.கே.எஸ். வீதி, கொக்குவில்.**
தொ.பே. : 021- 222-5931
0776286461. (சி-49263)

தகவல்: **ப.யோகராணி** (மகள்).

### நல்லையா தவராசா



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் கட்டுவன் தென்மயிலையை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா தவராசா அவர்கள் 11.05.2006 வியாழக்கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் சீவரத்தினம் (குருவி, சிவஞானம்) ஆகியோரின் அன்பு மருமகனும், இந்திராதேவியின் அன்புக் கணவரும் கீத்தா, கபேஸ்சன் (யா/தேசிய கல்வியியல் கல்லூரி இறுதிவருட மாணவன்), சதீசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகராசா, தவமலர், நவமலர், யோகமலர், இராசமலர், ஜெயமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தெய்வேந்திரன் (ஹொலண்ட்), கமலாதேவி, ரவீந்திரன் (பிரான்ஸ்), சரோஜினிதேவி (பிரான்ஸ்), பாலேந்திரன் (பிரான்ஸ்), லலிதாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.05.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தற்போதைய வதிவிடமான கோண்டாவில் கிழக்கு குமரகோட்டத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குமரகோட்டம், கோண்டாவில் கிழக்கு.** (50193)

தகவல்: **மனைவி, பிள்ளைகள்.**

### அமரர் முத்துவேலு காளிதாஸ்
### (சாமியார்)

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் நல்லூர் மூத்த விநாயகர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துவேலு காளிதாஸ் 11.05.2006 அன்று அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துவேலு அவ்வையம்மா ஆகியோரின் அன்புமகனும் காலஞ்சென்ற இராசையா கண்மணியின் அன்பு மருமகனும் யோகம்மா (றம்பா)வின் அன்புக் கணவரும் சுவாமிநாதன் ஆச்சாரியின் அன்புச் சகோதரனும் உதயகுமாரி (நல்லூர் கு.சு.சே.உ.சாவகச்சேரி மா.வை.) குகதாஸ் (பிரான்ஸ்), சந்திரகுமாரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயகாந்தன், சுமதி ஆகியோரின் அன்பு மாமனும் சாயிஜன் (யா.ம.க.), காலஞ்சென்ற ஜனனீ, வாமனா (நல்.சென்றபெனடிக்), நிதுஷன், மிதுனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (12.05.2006)வெள்ளிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. தகவல் தாமதமானதற்கு வருந்துகின்றோம்.

06, மூத்தவிநாயகர் வீதி,
முதலாம் ஒழுங்கை,
நல் ூர். (50194)

தகவல்: **மருமகன் ஜெயகாந்தன் (செட்டியார்) தொ.பே.0776548260.**

## 31ஆம் நாள் நினைவுப் பூக்கள்

எமது பாடசாலை ஆசிரியர்

**திருமதி நளாயினி சுஜிந்தன்**

அவர்களின் பாசமிகு தந்தை

**அமரர் ஆறுமுகம் வைரமுத்து**

அவர்களின் மறைவையொட்டி 31ஆம் நாள் நினைவஞ்சலிப் பூச்சரங்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரைப் பிரிந்து துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதல்களையும் கூறி நிற்கின்றோம்.

கிளி/ பளை றோ.க.த.க. பாடசாலை, பளை. (சி-49265)

**அதிபர், ஆசியர்கள், மாணவர்கள்.**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமது நிர்வாகக் கடற் பகுதியில் தமக்கு உரிமை உண்டு என்கின்றனர் புலிகள்

## கண்காணிப்புக் குழுவுக்கு தமிழ்ச்செல்வன் பதிலடி



கிளிநொச்சி, மே 13

யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கமைய தமது நிர்வாகக் கடற்பிரதேசத்தில் தமது கடற்புலிகளின் நடவடிக்கைகளுக்கு உரிமை உண்டு என்று இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் பதிலளித்துள்ளனர்.

வெற்றிலைக்கேணியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கடற் சம்பவம் தொடர்பாக கருத்து வெளியிட்ட இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், விடுதலைப் புலிகளுக்கு இலங்கைக் கடலில் உரிமை இல்லை என்று தெரிவித்திருந்தனர்.

இதற்குப் பதில் தெரிவித்து கண்காணிப்புக் குழுத் தலைவர் உல்ப் ஹென்றிக்சனுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கடிதம் ஒன்றை நேற்றுமுன்தினம் அனுப்பி வைத்திருக்கின்றார்.

'மே 11ஆம் திகதி நடைபெற்ற கடற் சம்பவம் மற்றும் வன்னிப் பிரதேசம் மீதான குண்டு வீச்சு' என்ற தலைப்பில் அமைந்த அந்தக் கடிதத்தின் விவரம் வருமாறு:-

யுத்த நிறுத்த ஒப்பந்தம், இராணுவச் சமநிலையை அடிப்படையாகக் கொண்டது. யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடர இராணுவச் சமநிலை அவசியமானது என்பது சாதாரண உண்மை.

இந்த இராணுவச் சமநிலைக்கு யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு முன்னரே கடற்புலிகள் பங்களிப்புச் செய்துள்ளனர். எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களின் கடற்பிரதேசங்களை கடற்புலிகள் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த உண்மை 2003ஆம் ஆண்டு ஏப்ரல் 25ஆம் திகதி இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு வெளியிட்ட அறிக்கையிலும் உறுதிப்படுத்தப்பட்டது.

*"யுத்த நிறுத்த ஒப்பந்தம் கடந்த 2002ஆம் ஆண்டு பெப்ரவரி 22ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டபோது தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களது கடற்புலிகளையும் கொண்டிருந்தனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் இருப்பானது ஓர் அறிவிக்கப்படாத கடற்படை யாகும். தற்போதைய யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு இராணுவச் சமநிலை என்பது அடிப்படையானது. இரு தரப்பினரும் தங்களது பிரதேசங்களில் பயிற்சிகள் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிமை உண்டு."*

- என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசக் கடற் பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்படைக் கலங்கள் ஆயுதங்களுடன் பயணிக்கும் என்று பேச்சிலும் எழுத்திலும் பல முறை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு நாம் தெரிவித்திருந்தோம்.

மேலும் எமது நடவடிக்கைகளில் இலங்கைக் கடற்படையினர் இடையூறு விளைவிக்கும்போது நாம் பதில் நடவடிக்கை மேற்கொள்வோம் என்றும் திரும்பத் திரும்பக் கண்காணிப்புக் குழுவுக்குத் தெரிவித்திருந்தோம். இந்தக் காரணத்துக்காகவே இலங்கையின் கடற்கலங்களில் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கடல் கண்காணிப்பாளர்களைப் பயணிக்க வேண்டாம் என்றும் நாம் எச்சரித்திருந்தோம்.

இத்தகைய எச்சரிக்கை தெரிவிக்கப்பட்டு எம்மால் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்ட கடிதங்களையும் நாம் இத்துடன் இணைத்துள்ளோம்.

இந்தப் பின்னணியில், மே 11ஆம் திகதியன்று எமது கட்டுப் பாட்டுப் பிரதேசங்களின் கடற் பகுதியில் நாங்கள் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது எமது நடவடிக்கைகளுக்கு இலங்கைக் கடற்படையினர் இடையூறு விளைவிக்கவும் தாக்குதல் நடத்தவும் முனைந்தனர். ஆகையால், நாம் பதில் தாக்குதல் நடத்துவோம் என்று எச்சரித்தோம்.

இலங்கைக் கடற்படையினரால் கடற்புலிகளின் கலங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் எமது 4 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர். இரு போராளிகள் படுகாயமடைந்துள்ளனர்.

மே 11ஆம் திகதியன்று இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இது தொடர்பில் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் -

*"ஸ்ரீலங்காவைச் சுற்றியுள்ள கடற் பிரதேசமானது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதாகும். இதனை சர்வதேச விதிகளுக்கமைய கண்காணிப்புக் குழுவின் தலைவர் உறுதிப்படுத்தியுள்ளார். அரச சார்பற்ற சக்திகள் கடற்பிரதேசத்தையோ வான்பரப்பையோ நிர்வகிக்க முடியாது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அத்தகைய உரிமை இல்லை"* - என்று தெரிவித்திருந்தனர்.

இராணுவச் சமநிலையில் கடற்புலிகளும் ஓர் அங்கம் என்றும், அவர்கள் தங்களது பயிற்சிகள் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிமை உண்டு என்றும் முன்னர் கண்காணிப்புக் குழு வெளியிட்டிருந்த அறிக்கைக்கு இது முரணானது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

இதனடிப்படையிலும் எமது எச்சரிக்கைகளின் அடிப்படையிலும் இலங்கைக் கடற்படையின் கடற்கலங்களுக்குப் பாதுகாப்பாகக் கண்காணிப்புக் குழுவின் கடற் கண்காணிப்பாளர் பயணிப்பது ஆபத்தானது. அதே நேரத்தில் எமது கடற்படையின் கடற்கலங்களுக்கோ எமது போராளிகளுக்கோ கண்காணிப்புக் குழுவினர் பாதுகாப்பு வழங்கவில்லை. அதிலும் மோசமாக, இச்சம்பவமானது யுத்த நிறுத்த மீறலாக எமக்கு எதிராகக் கூறப்பட்டுள்ளது.

மே 11ஆம் திகதிய கடல் சம்பவத்தைத் தொடர்ந்து இலங்கை விமானப் படையினர் வன்னி பிரதேசம் மீது குண்டுகளை வீசினர்.

திருகோணமலை சம்பூர் பகுதியில் மக்கள் குடியிருப்புகள் மீது ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கண்மூடித்தனமான எறிகணை மற்றும் ஆட்டிலறித் தாக்குதல்களை நடத்தினர்.

இந்தத் தாக்குதல்கள் பாரிய யுத்த நிறுத்த மீறல்களாகும். இருப்பினும் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இந்தப் பாரிய யுத்த நிறுத்த மீறல்களுக்குக் கண்டனம் தெரிவிக்கவில்லை.

கண்காணிப்புக் குழுவினரது இந்தப் பாரபட்ச செயற்பாடானது எமக்கு அதிர்ச்சியளிப்பதாகவும், அதிருப்தியளிப்பதாகவும் உள்ளது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அச்சுவேலியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படும் இனந்தெரியாத நபர்கள் இவரது கடைக்குள் புகுந்து இவரைச் சுட்டுக்கொன்றுவிட்டுத் தப்பிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மல்லாகம் நீதிமன்ற நீதிவான் திருமதி சறோஜினிதேவி இளங்கோவன் சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டார். பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணை என்பவற்றின் பொருட்டு சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்குமாறு அவர் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

(க-11-15-178-190)

## கடற்படையினரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- அதாவது மே 11 ஆம் திகதி - அனுப்பப்பட்டது. 'இலங்கை கடற்படைக் கலங்களில் கண்காணிப்பாளர்கள்' என்ற தலைப்பில் வரையப்பட்ட அந்த மூன்றாவது கடிதத்தில் புலிகள் தெரிவித்திருப்பதாவது:-

இலங்கையின் கடற்படைக் கலங்களில் ஏறுவதைத் தவிர்க்கும்படி உங்களுக்குப் பல தடவைகள் வாய்மூலம் நாம் அறியத்தந்திருந்தோம். இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் இதுகுறித்து எழுத்துமூலமும் நாம் தெரிவித்திருந்தோம். இலங்கைக் கடற்படைக் கலங்களில் ஏறவேண்டாம் என்று இக்கடிதம் மூலம் மூன்றாவது தடவையாகக் கோருகின்றோம்.

எங்களின் கட்டுப்பாட்டில் உள்ள தரைப் பிரதேசத்தை அண்டிய கடற்பரப்புக்குள் நுழையும் இலங்கைக் கடற்படை மக்களின் மீன்பிடித் தொழிலைக் குழப்புகின்றது. அப்படிச் செய்கையில் புலிகளின் பயிற்சி நடவடிக்கைகளையும் அது குழப்புகின்றது. இலங்கைக்கடற்படை, எமது செயற்பாட்டைக் குழப்பினால் நாம் நிச்சயமாகப் பதிலடி தருவோம்.

தனது இந்தக் குழப்பவேலைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை இலங்கைக் கடற்படை ஒரு மனித கேடயமாகப் பயன்படுத்துகின்றது.

எங்களிடமிருந்து மறு அறிவித்தல் கிடைக்கும்வரை நீங்கள் கடற்படைக் கலங்களில் ஏறவேண்டாம் எனக் கடைசித் தடவையாகக் கோருகின்றோம். எங்களது இந்தக் கோரிக்கையையும், எச்சரிக்கையையும் உதாசீனம் செய்ய நீங்கள் தீர்மானித்தால், அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு நாம் பொறுப்பாளிகளல்லர். எனவே, தயவு செய்து இலங்கைக் கடற்படைக் கலங்களில் ஏறாமல் விடுவதற்கான இறுதி எச்சரிக்கையாகவும், அறிவிப்பாகவும் இதனைக் கொள்ளுமாறு வேண்டுகிறோம். - என்று உள்ளது. (க)

## கண்காணிப்பாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னத்தை நேற்றுக்காலை வழிமறித்த சிங்களக் காடையர்கள், அவரையும், அவரது சாரதியையும் தாக்கவும் முற்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், காடையர்களின் பிடியிலிருந்து ஒருவாறு தப்பித்துவந்த கண்காணிப்பாளர், இதுகுறித்து தமது தலைமை அலு வலகத்திற்கு அறிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (க)

## புதுடில்லியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு புதுடில்லி வந்த ஜப்பானின் விசேட தூதுவர் அகாஷி வெளியுறவுத்துறை செயலர் ஷியாம் சரண், பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இலங்கை அமைதி முயற்சிகளில் இந்தியாவின் அதிக பங்களிப்பைக் கோரிய அகாஷி, இணைத்தலைமை நாடுகளின் அடுத்த கட்ட டோக்கியோ கூட்டத்திற்கு இந்தியாவின் பங்களிப்பைத் தாம் வரவேற்கின்றார் எனத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புகள் தொடர்பில் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட இந்திய வெளியுறவுத்துறைப் பேச்சாளர் நவ்தேஜ் சர்ணா, இலங்கையில் அமைதி முயற்சிகள் குறித்தும், இது தொடர்பில் நடத்தப்பட்ட பேச்சுகள் பற்றியும், அகாஷி புதுடில்லியை அறிவுறுத்தியிருக்கிறார் எனக் கூறினார். (க)

## வடமராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் தாக்குதல் தொடுத்ததில் நான்கு கடற்புலிப் போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

மேஜர் மலர்நிலவன் (யேசுராசா சுவேந்திரன் - 2ஆம் வட்டாரம், ஊர்காவற்றுறை, தற்காலிக முகவரி:- தாளம்பிட்டி, தட்சனா மருதமடு, மன்னார்), லெப்.கேணல் அன்பு (நாகேஸ்வரன் அமுதசுமனா என்ற சுமனா மகான் வீதி, ஆழியவளை, தாளையடி), லெப். கேணல் கவியழகி (பேதுருப்பிள்ளை டேலறோஸ் என்ற சாந்தினி - மணற்காடு, குடத்தனை தற்காலிக முகவரி:- 23ஆம் கட்டை, தேராவில், முல்லைத்தீவு), லெப். கேணல் காஞ்சனா என்ற புவிச்செல்வி (புஸ்பராஜா ஜெனிதா என்ற நளினா - முதலாம் கட்டை, வியாபாரி மூலை, பருத்தித்துறை). ஆகிய போராளிகளே வீரச்சாவைத் தழுவிக்கொண்டவர்களாவர் - என்று தெரிவிக்கப்பட்டது.

## கண்காணிப்புக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்போதே புலிகளின் சீற்றம் நேரடியாகக் கண்காணிப்புக் குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டதாக அறியவந்தது.

இந்தச் சந்திப்பின் பின்னர் கிளிநொச்சியில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த தமிழ்ச்செல்வன், அந்தப் பேட்டியில் தெரிவித்ததாவது:-

கண்காணிப்புக் குழுத் தலைவரை அழைத்து நேற்று அவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பாக எமது தலைமைப் பீடத்தின் மிகக் கடுமையான அதிருப்தியையும் கண்டனத்தையும் தெரிவித்திருக்கின்றோம்.

கண்காணிப்புக் குழு நேற்று நடந்த சம்பவம் தொடர்பாக விடுத்த அறிக்கையில் எமது கடற் பிராந்தியமோ எமது கட்டுப்பாட்டுக்குரிய வான் பரப்போ எமக்கு உரித்துடையவை அல்ல என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்படியான அறிக்கையை விடுவதற்கு கண்காணிப்புக் குழுவுக்கு எந்த அதிகாரமும் இல்லை. அமைதி முயற்சிகளில் இரு சம தரப்புகள் என்ற அடிப்படையில் இரு தரப்பினுடைய படை வலுச்சம நிலையின் அடிப்படையில் - இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கை உருவாக்கப்பட்டது. அமைதி முயற்சிகளும் அந்த அடிப்படையில்தான் முன்னெடுக்கப்பட்டன. ஆகவே, எம்மை ஒரு குழுவாக நோக்குவதற்கு இது கொண்டு வரப்படவில்லை.

இலங்கைப் படைகளும் இலங்கை அரசும் இராணுவ ரீதியாக எம்மை வெற்றி கொள்ள முடியாது என்ற யதார்த்தத்தின் அடிப் படையில்தான் அமைதிப் பேச்சுக்கும் யுத்த நிறுத்த உடன்பாட்டுக்கும் வந்தார்கள். இரண்டு தரப்புகளையும் சம தரப்பாக சர்வதேச சமூகம், மற்றும் அனுசரணையாளர்கள் அங்கீகரித்து. இந்த உடன்படிக்கையை ஏற்படுத்தி, பேச்சுவார்த்தை முயற்சிகளை ஆரம்பித்தனர்.

இந்த உண்மை நிலைமையை தகர்க்கும் வகையில் - பலவீனப் படுத்தும் வகையில் - கண்காணிப் புக் குழு அறிக்கையை வெளியிட்டமையை பாரதூரமான விடயமாக எமது தலைமைப்பீடம் கருதுகின்றது. எமது மக்கள் கொதித்துப் போயிருக்கின்றார்கள். எமது உரிமைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தும் வகையிலும் இத்தனை காலமும் செய்யப்பட்ட தியாகங்களையும், அர்ப்பணிப்புக்களையும் கொச்சைப்படுத்தும் வகையிலும் கண்காணிப்புக் குழு நேற்று (நேற்றுமுன்தினம்) விடுத்த அறிக்கை அமைந்திருப்பதால் அது சரியான தல்ல என்று அவர்களிடம் கூறியிருக்கின்றோம்.

இதற்கு உடனடியாகப் பதில் தரவேண்டுமென்றும் அவர்களிடம் கேட்டிருக்கின்றோம் - என்றார் தமிழ்ச்செல்வன்.

## இளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் சடலத்தை உறவினர்கள் கண்டனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக உறவினர்கள் ஊர்காவற்றுறைப் பொலீஸாருக்கு முறைப்பாடு செய்தனர். பொலீஸாருடன் ஊர்காவற்றுறை நீதிவான் ஜெயராமன் ரொக்ஸி சம்பவ இடத்திற்கு நேற்றுச் சென்று விசாரணைகளை நடத்தினார்.

பாழடைந்த வீட்டில் தோண்டப்பட்ட குழியொன்றில் அரைகுறையாகப் புதைக்கப்பட்ட சடலத்தின் தலைப்பகுதி மட்டும் வெளியே தெரிந்தது.

ஊர்மக்களின் உதவியுடன் குழி தோண்டப்பட்டு சடலம் வெளியே எடுக்கப்பட்டது. சடலத்தின் தலைப்பகுதியில் வெட்டுக்காயங்கள் காணப்பட்டன.

சடலத்தை பிரேத பரிசோதனைக்குட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி யாழ். சட்ட வைத்திய அதிகாரிக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

(15-190)

## மூதூரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வத்தில் கொல்லப்பட்டவர் பாலகுமார் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இவர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். (க)

## அமைதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'இணைத்தலைமை நாடுகள்' என்ற அமைப்பைக் கொண்டுள்ளன.

இந்த 'இணைத்தலைமை நாடுகள்' அமைப்பு அமைதி முயற்சிகளை முன்னெடுக்க வழங்கும் ஆதரவுக்கு மேலும் வலுவைப் பெற்றுக்கொள்வதற்காகவே 'இலங்கையின் நட்புறவு நாடுகள்' என்ற புதிய அமைப்பு உருவாக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே, விடுதலைப் புலிகளைத் தடைசெய்துள்ள இந்தியா, கனடா, பிரிட்டன் போன்ற நாடுகளையும் இந்த புதிய அமைப்பில் இணைத்துக்கொள்ள ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும், எதிர்வரும் 30ஆம் திகதி டோக்கியோவில் நடைபெறவுள்ள இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் இதுபற்றிய தீர்மானம் எடுக்கப்படுமென்றும் இராஜதந்திர வட்டாரங்கள் மேலும் கூறின. (க)

*இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.05.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனிக்குப் பதிலாக 'ஸீரோ'




பிலோபயோடிக்ஸ் பிரைவேட் லிமிட்டட், இந்தியாவின் மிகப்பெரிய மருத்துவ நிறுவனமான அலெம்பிக் லிமிட்டட்டுடன் இணைந்து இலங்கையில் முதலாவது கலோரியற்ற இனிப்பூட்டியான 'ஸீரோ'வை (Zero) அறிமுகப்படுத்தியது. சர்வதேசரீதியில் அங்கீகாரம் பெற்ற ஸீரோ வில்லை ஒன்று 6.5 மில்லிகிராம் சுக்ரலோசைக் கொண்டுள்ளதுடன், ஒன்று அல்லது இரண்டு தேக்கரண்டியளவு சீனியின் இனிப்பையும் வழங்குகின்றது.

'ஸீரோ' சக்திமிக்க செயற்கை இனிப்பூட்டியாக (மாற்று சீனி) உள்ளதுடன் சீனியிலிருந்து தயாரிக்கப்படும் ஒரே மாற்றுச் சீனியாகும். இது சீனியைவிட 600 மடங்கு இனிப்பாகவுள்ளதுடன், கலோரியற்றதாகவும் உள்ளது. தற்போது கிடைக்கும் மாற்றுச் சீனிகளைப்போல விரும்பத்தகாத சுவையை இது கொண்டிருக்காது.

பிலோபயோடிக்சின் முகாமைத்துவப் பணிப்பாளர் அஜந்த விதானாராச்சி, ''சீனியைப்போன்ற இனிப்பை இழக்காமல் 'ஸீரோ' வை சீனியைப் போலவே உபயோகிக்க முடியும். இது சர்வதேசரீதியாக இனிப்பூட்டியாக உபயோகிக்கப்படுவதுடன் தேனீர், கோப்பி, குளிர்பானங்கள், ஐஸ் கிறீம்கள், பால் உற்பத்திகள், ஜேம்கள், பேக்கரி உற்பத்திகள், போஷாக்கு இணை உணவுகள் மற்றும் இன்னும் பலவற்றில் மாற்றுச் சீனியாக உபயோகிக்கப்படுகின்றது.'' எனத் தெரிவித்தார்.

இந்தியாவின் அலெம்பிக் லிமிட்டட்டின் மருத்துவ சேவைகளின் தலைவர் வைத்தியர் ஏ.ஓ. பரிக் ''உடல்நிறையைப் பராமரித்தல், நிறை குறைத்தல், நீரிழிவு நோயை முகாமைத்துவம் செய்தல், பற்சூத்தைகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் உடல் கொழுத்தல் தொடர்பான ஆபத்துகளை குறைத்தல் போன்றவற்றிற்கு இது உதவியாகப் பயன்படுகின்றது என ஆராய்ச்சிகள் வெளிப்படுத்துகின்றன'' எனத் தெரிவித்தார்.

பல சர்வதேச சுகாதார ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைகள் இதை ஏற்றுக்கொள்ளக்கூடிய மாற்றுச் சீனியாகவும், நீரிழிவு உணவுத் திட்டத்தின் ஒரு பகுதியாகப் பாதுகாப்பானதாகவும் கருதுகின்றன. US FDA, உலக சுகாதார நிறுவனம், அமெரிக்கத் திட்ட உணவு சங்கம், அமெரிக்க பல்சங்கம், நீரிழிவு சங்கம் மற்றும் உணவு தொடர்பான ஐரோப்பிய ஆணைக்குழுவின் விஞ்ஞான செயற்குழு ஆகியவை அவற்றுள் அடங்கும்.

இலங்கையிலுள்ள அதிக நீரிழிவு நோயாளர்களின் வீதமானது இந்த சிறப்பான கலோரியற்ற இனிப்பூட்டி உள்ளூர்ச் சந்தையில் வெற்றியடைய வழிவகுக்கும் என நம்பிக்கை கொண்டுள்ளதாகத் தெரிவித்த விதானாராச்சி, ''இலங்கையின் உணவுகளில் சீனிக்கு மாற்றுப்பொருளை வழங்குவதே எமது குறிக்கோளாகும். நுகர்வோர் ஆரோக்கியமான கலோரியற்ற வாழ்வை வாழ வழியமைக்கும் அதேவேளை, இந்தப் பிரிவை அபிவித்தி செய்வதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.'' எனக் கூறினார்.

# eSys கணினி நிறுவனம் இலங்கைச் சந்தையில்!

உலகின் முன்னிண Hard disk விநியோகஸ்தர்களான eSys இலங்கையின் தகவல் தொழில்நுட்பத்துறையின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு இவ் ஆண்டின் இறுதியில் கொழும்பில் முற்றுமுழுதாக உரிமைபெற்ற நிர்வகிக்கும் கம்பனி அலகினை ஸ்தாபிக்கவுள்ளது.

eSys இனது குறிப்புப் புத்தகங்களும் (Note Books) இலங்கையின் பிரத்தியேக கணினிகளும் மிகவும் சாதாரணமான விலைகளில் இலங்கைச் சந்தையில் கிடைக்கவுள்ளன. பிரதான பிரதேசங்களான கண்டி, காலி, குருநாகல் மற்றும் இரத்தினபுரி ஆகியவற்றில் 4 பிராந்திய நிலையங்களினூடே செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு எண்ணியுள்ளது.

eSys ஆனது தனது உள்ளூர் பங்காளித்துவ வலையமைப்பினூடாக பல்வேறுபட்ட தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் விற்பனைப் பயிற்சி அலகுகளையும் தொழிற்படுத்துவதற்கு முனைப்புடன் உள்ளது. அத்துடன் eSys ஆனது பிரதான விடயங்களான 'இலாபத்தன்மை', 'வியாபார முன்னேற்றம்' முதலியனவற்றை உதாரணகற்கைகள் மற்றும் வியாபார செயலமர்வுகள் மூலம் முன்னெடுப்புப் பங்காளர்களின் வியாபாரத்தை மேம்படுத்தி நாட்டில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை விருத்திசெய்ய உதவுகின்றது.

eSys ஆனது 2004ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் இன்ரெல் இன் முன்னணி விநியோகஸ்தராகத் தொழிற்படுவதுடன் இன்ரெல் முதலாவது உத்தரவாதப்படுத்தப்பட்ட சேவை நிலையத்தினையும் நிறுவியிருந்தது. தற்போது இலங்கையில் மிக நவீன சேவைநிலையமொன்றை நிறுவி உலகெங்கும் அபிவிருத்தியடைந்துள்ள தொழில்நுட்பத்தினை நுகர்வோர் மிக நேர்த்தியான அனுபவங்களையும், பிந்திய தொழில்நுட்பங்களையும் அவற்றின் பயன்களையும் அனுபவிக்கச் செய்யும் வகையில் திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

eSys ஸ்ரீலங்கா 2004இல் நிறுவப்பட்டு நாட்டில் கணினிப் பாகங்களை விநியோகம் செய்வதில் முன்னணிகளுள் ஒன்றாக மிக விரைவாக மாற்றமடைந்தது. இலங்கையில் இன்ரெல் மற்றும் HDD விநியோகத்தில் தனது செயற்பாட்டு நிலை மூலமும் முதலாவது வருட செயற்பாட்டின் மூலமும் வருமானத்தில் தனையையும் முறியடித்தது.

இந்நிகழ்ச்சி முன்னெடுப்பு சம்பந்தமாக eSys இன் உள்ளூர் முகாமையாளர் ஷப்ராஸ் ஹம்சுதீன் கூறும்போது, ''இலங்கையில் கல்வியறிவு 90 வீதமாக இருப்பினும் தகவல் தொழில்நுட்ப அறிவு 10 வீதத்திற்கும் குறைவாகவே உள்ளது. எமது நாடுகளைப் பொறுத்தமட்டில் உயர் விலைக் கேள்வியினால் கணினியானது விலையுயர்ந்ததொரு பொருளாகவே உள்ளது.''

"eSys ஆனது கணினியை ஒவ்வொருவருக்கும் பெறக்கூடிய விதத்தில் மாற்றுவதற்குத் திட்டமிட்டுள்ளது. பிரத்தியேகக் கணினிகளில் உலகத்திலேயே விலையில் மிகக் குறைந்த eSys கணினிகளை இன்னும் இரு மாதங்களில் அறிமுகப்படுத்துவதற்கு நாம் எண்ணியுள்ளோம். எவ்வாறெனினும் தொழில்நுட்பத்தை விற்பனை செய்வது மட்டும் எமது நோக்கமல்ல.''

''நாம் எமது பங்காளர்களுக்கு அறிவினையும் தேவைகளையும் பூர்த்திசெய்வதால் அது அவர்களுடைய வாடிக்கையாளர்களுக்கும் கிடைக்கும். இதனூடே நாட்டில் மேலும் அறிவினை வாடிக்கையாளர்களுக்கு ஊட்டி அனைத்து நிலையில் தகவல் தொழில்நுட்ப அறிவை விரிவுபடுத்துவோம்''. - என்றார்.

Vi[illegible]s Goel இனால் 200[illegible] [illegible]ல் ஸ்தாபிக்கப்பட்ட eSys குறுகிய 3 ஆண்டு காலப்பகுதியில் 'உலகத்தில் பாரிய Hard disk விநியோகத்[illegible]' எனும் நிலையை அ[illegible]தது. இதே ஆண்டிலேயே உலகத்தில் மிக விலை குறைந்த eSys பிரத்தியேக கணினிகளை USD199 விலைப் பட்டியலுடன் அறிமுகம் செய்தது.

இன்று eSys ஆனது 30 நாடுகளில் 125 இடங்களில் 3.5 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான வருமானத்தினைப் பதிவாக்கித் தொழிற்படுகின்றது. இந்நிறுவனம் இன்று உலகளாவிய களஞ்சிய விநியோகச் சந்தையில் 25 வீதப் பங்குகளைக் கொண்டிருப்பதுடன் ஆசியா, இலத்தீன் அமெரிக்காவில் CPU மற்றும் Memory விநியோகத்தில் முதன்மையாளராகவும் உள்ளது.

eSys ஆனது சிங்கப்பூரின் சங்கி, டுபாயின் ஜபல் அலி, இந்தியாவின் புதுடில்லி மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் சினோ மற்றும் கலிபோர்னியா ஆகிய நகரங்களைக் கொண்டு தொழிற்படுகின்றது.

19 வயதில்
முகாமைத்துவ பயிலுனர்.

இதைக் கேட்கும் போது
சந்தோசமாக இல்லையா?

19 வயதில் முகாமைத்துவ பயிலுனராவது ஒரு கனவல்ல. CIMA யுடன் இணைந்தால் அதனையும் நீங்கள் சாதிக்க முடியும். இது ஒரு பட்டப் படிப்பு மட்டுமல்ல, பாடத்திட்டத்திற்கு புறம்பான பல திறமைகளையும் பயிற்சிகளையும் அது உங்களுக்கு வழங்குகின்றது. உங்கள் நாளாந்த நடவடிக்கைகளை இலகுவாக்கும் வகையில் உங்களுக்கு வசதியான நேர அட்டவணையை நாம் வழங்குகிறோம். அதிலிருந்து உங்களுக்கு ஏற்ற முழுநேர, பகுதி நேர அல்லது வார இறுதி வகுப்புகளை நீங்கள் தெரிவு செய்து கொள்ள முடியும். இது வேலை செய்து கொண்டே கல்வி கற்கும் வாய்ப்பை உங்களுக்கு வழங்குகின்றது.

மாணவர் அனுமதி இப்போது ஆரம்பமாகி விட்டது. மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் – 2 503880 அல்லது விஜயம் செய்யுங்கள் :
www.cimaglobal.com

CIMA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துஷ்பிரயோக விழிப்புணர்வு நிகழ்ச்சி CIC Paints நுவரெலியாவில் நடத்தியது



சிறுவர் துஷ்பிரயோக விழிப்புணர்வு நிகழ்ச்சியின்போது CIC Paints நிறுவனத்தின் ஊழியர்கள் நன்கொடை சேகரிக்கின்றனர்.

சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுத்து நிறுத்தவும் அது தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தவும் CIC Paints நிறுவனத்தின் சிறுவர் பாதுகாப்பு. நம்பிக்கை நிதியம் கடந்த மாதம் விழிப்புணர்வு நிகழ்ச்சியொன்றை நடத்தியது.

இந்நிகழ்ச்சி ஏப்ரல் மாதம் 14,15 மற்றும் 16ஆம் திகதிகளில் நுவரெலியா நகரில் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியின்போது சிறுவர்களின் நலன்களை மேம்படுத்தும் பொருட்டு நிதி சேகரிக்கப்பட்டதோடு சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக 3,000 பேரின் கையெழுத்துகளும் பெறப்பட்டன.

இக்கையெழுத்துகளைப் பெறுவதற்காக 100 அடி நீளம் கொண்ட கொடி ஒன்று பயன்படுத்தப்பட்டது. வீதியால் சென்ற அனைவரது கவனத்தையும் இக்கொடி வெகுவாகக் கவர்ந்தது. அனைவரும் இதில் கையெழுத்திட்டனர்.

மக்கள் இத்திட்டத்திற்காக மிகவும் ஆர்வத்துடன் கொடியில் கையெழுத்திட்டு உண்டியலில் நன்கொடைப் பணத்தைச் செலுத்தி தமது ஒத்துழைப்பை வழங்கினார்.

இரண்டாம் நாள் 15ஆம் திகதி கொடி இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒரு பகுதி நகர மண்டபப் பகுதிக்கும் மற்றைய பகுதி கிராண்ட் ஹோட்டல் பகுதிக்கும் அனுப்பப்பட்டன.

இரண்டாம் நாள் அதிகளவான கையெழுத்துக்கள் பெறப்பட்டன. இறுதி நாளான 16ஆம் திகதி கொடி நுவரெலியா பஸ் நிலையத்திற்கு மீண்டும் கொண்டுவரப்பட்டது. இங்கும் அதிகமான மக்கள் கையெழுத்திட்டனர். பின்னேரம் ஆகுகையில் கொடியில் கையெழுத்து வைக்க இடம் இருக்கவில்லை.

CIC Paints நிறுவனத்தின் சிறுவர் நலன் மீதான நடவடிக்கை சர்வதேச பாராட்டைப் பெற்றுள்ளது. இப்போதைய இந்த நிகழ்ச்சியும் அவ்வாறான செயற்பாட்டின் தொடர்ச்சியாகும்.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின்போது சேகரிக்கப்பட்ட நிதி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையுடன் இணைந்து CIC Paints நிறுவனம் மேற்கொண்டுவரும் சிறுவர் மேம்பாட்டு நடிவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும்.


# இருமல்........ இருமல்........ எங்கும் இருமல்

இருமல், தடிமல், மூச்சுத் திணரல்,
(மூச்சு விட கஷ்டப்படுதல்)
மற்றும் எல்லாவிதமான........

சித்தாலேப
இருமல் அரிஷ்ட






சித்தாலேப

சித்தாலேபயின்
இன்னுமொரு தயாரிப்பு

வட புல விநியோகஸ்தர்:-

வனிக்கா மெடிக்கல்ஸ்
85, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 0212226291
தொலைநகல்:- 0212222445
மின்னஞ்சல்:- vanlkaa@sltnet.lk

ஹெட்டிகொட இன்டஸ்ரீஸ் (பிரை) லிமிட். 33/3, ஸ்ரீ தர்மராம றோட், இரத்மலானை, இலங்கை.
தொலைபேசி: 2736910 தொலைநகல்: -2735465

# சொக்லட், வனிலா சுவையூட்டப்பட்டது




Action
Nutritional Food Drink




போஷாக்கு நிறைந்த பானம்




**Action இன் போஷணை அனுகூலங்கள்:**

Action ஆனது 11 கனியுப்புக்கள், 13 விட்டமின்கள், புரதம், காபோவைதிரேற்று, கொழுப்பு அடங்கலாக 27 அத்தியாவசிய போஷணை பதார்த்தங்களை முழுக்குடும்பத்திற்கும் (1 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகள்) வழங்குகின்றது. அத்துடன் Action பீற்றா கரோட்டினையும் கொண்டுள்ளது.

**தயாரிக்கும் முறை:**

சூடாகவோ குளிர்பானமாகவோ நீங்கள் விரும்பியவாறு பருகலாம்.
1)நிரம்பிய இரண்டுகரண்டிகள் Action இனை 240ml டம்ளரில் போடவும்.
2)அதற்கு சிறிதளவு இளம் சூடான நீர் சேர்த்து கலக்கவும்.
3)மேலதிக நீர் சூடாகவோ, குளிராகவோ தேவையான அளவு சேர்த்து சுவையான பானத்தை தயாரித்துக் கொள்ளவும்.

Ingredients:
Non - fat milk, whole milk, malto dextrin, whey powder vitamins, minerals and permitted flavour (vanilla chocolate)

Manufactured by:
Astron Astron Limited,
688, Galle Road, Ratmalana, Sri Lanka.
Tel: 2636741 Fax: 2636173 E-mail: astron@astron.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org